விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 15 திங்கட்கிழமை (28.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 99

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

# புலிகள் - கருணா குழுவிடையே தொப்பிக்கல காட்டில் மோதல்

## ஆறிற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்கிறார் இராணுவப் பேச்சாளர்

(நமது நிருபர்)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான தொப்பிக்கல காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், கருணா குழுவினருக்கும் இடையில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற மோதல் சம்பவங்களின்போது ஆறுபேர் பலியாகியுள் ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

தொப்பிக்கல காட்டுப் பகுதியில் நேற்று முன்தினமிரவு வெவ்வேறு மோதல் சம்ப வங்கள் இடம்பெற்றதாகவும், அது விடுதலைப் புலிகளுக்கும் - அவர்களிலிருந்து பிரிந்துசென்ற கருணா குழுவினருக்குமிடையே இடம்பெற்றிருக்கலாம் எனவும், அதன் போது நான்கு அல்லது ஆறுபேர் பலியாகியுள்ளதாகவும் பலர் படுகாயமடைந்துள்ள தாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்நாயக்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்களின் பிரச்சினை குறித்து வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

### மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பிரச்சினைக ளுக்குத் தீர்வுகாணுமுகமாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்ய யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பெற்றோருக்கான கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெற்றோர் சங்க உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக சோ.பத்மநாதனும், செயலாளராக வி.சின்னத்தம்பியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளின் கல்வியைத் தொடர்வதற்கான வழிவகை களைஏற்படுத்துவதின்முதற்கட்ட நடவடிக்கையாகநீதிமன்றத்தில வழக்குத் தாக்கல்செய்ய பெற்றோர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி கணபதிப்பிள்ளை கிராமத்தில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட கிராமத்தின் வீதியால் நடந்துசென்றுகொண் டிருந்த சமயம் மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரி யாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிர யோகத்திலேயே இளைஞர் கொல்லப்பட்டுள்ளார். துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் மோட்டார் சைக்கி ளில் தப்பிச்சென்றுள்ளனர்.

கொல்லப்பட்டவரின் அடையாள அட்டை மூலம் இவர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கண்ணன்குடா கொத்தியாபுலவைச் சேர்ந்த நடராசா சுவேந்திரன் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளார். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தர்மசேன ரத்னாயக்க தெரிவித்தார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (08)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இரண்டுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சந்தனமடுப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இருபொதுமக்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவடிவேம்பைச் சேர்ந்த ஆறுமுகம் நாகலிங்கம் (வயது 41), சித்தாண்டியைச் சேர்ந்த சிவலிங்கம் பாஸ்கரலிங்கம் (வயது 16) ஆகிய இரு வருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

செங்கல் சூளையில் தொழில்புரியும் இவர்கள் இருவ ரும் அங்கு தங்கியிருந்தார்கள் என்றும், மீன் பிடிப்பதற் காக அருகிலிருந்த குளத்திற்கு சென்ற சமயம் மறைந் திருந்த ஆயுதக்குழுவொன்றால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள தாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இருவரது சடலங்களும் உறவினர்களினால் அடையா ளம் காட்டப்பட்டு, (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களின் கொலைகளுக்கு இராணுவ சிறப்புப்படையே காரணம்

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சந்தன மடுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு அப்பாவிப் பொதுமக்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு இராணுவத்தின் சிறப்புப்படை அணியே பொறுப்பென விடுதலைப்புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கை வருமாறு: இப் பிரதேசத்தில் நீண்டகாலமாக இயற்கை வளங்களான மணல், மரம் ஆகியன இரவு வேளைகளில் களவாடப்பட்டு வருவதை மக்கள் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்திருந் தார்கள். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பரவலாக்கல் யோசனை

## சர்வஜன வாக்கெடுப்பிற்கு தமிழ் கூட்டமைப்பு எதிர்ப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனா திபதி முறையை ரத்துசெய்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் விடயங்கள் தொடர் பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால அதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புறக் கணிக்க முடிவுசெய்துள்ளது.

ஜனாதிபதி நடத்தும் சர்வஜன வாக்கெடுப பில் வடக்கு கிழக்கு வாழும் தமிழ் மக் கள் பங்கேற்கமாட்டார்கள். இந்த வாக் கெடுப்பானது அரசியல் விளையாட்டு வேலை. அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளுகிற நடவடிக்கை என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைக்கு நிரந்தத் தீர்வை உருவாக்காதவரை தமிழ் மக்கள் இது போன்ற எந்த ஒரு சர்வஜன வாக்கெடுப் பிலும் பங்கேற்கமாட்டார்கள். 20 ஆண்டு கால யுத்தத்தாலும் கடந்த டிசம்பர் 26 ஆழிப்பேரலையாலும் பெரும்பாதிப்புக ளுக்குள்ளாகி சுமைகளோடு வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காத நிலையில் எப்படி வாக்கெடுப்பில் பங்கேற்க முடியும்? என அவர் கேள்வி எழுப்பினார்.

ஆழிப்பேரலை மீள் கட்டமைப்புக்கு உரிய நிதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை அரசியலிலிருந்து நீக்க சுதந்திரக் கட்சிக்குள் சதித்திட்டம்

### சிறையிலிருந்து எஸ்.பி. சொல்கிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவை அரசியலிருந்து அகற்ற பிரதமர் மகிந்த சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து சதித்திட்டம் தீட்டிவருவதாக சிறையிலிருக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள் ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதைத் தெரிவித்துள் ளார். சர்வஜன வாக்கெடுப்பை சந்திரிகா நடத்தினால் அவரது கட்சி உடைந்துவிடும். பெரும்பான்மையான சுதந்திரக் கட்சியினர் இந்த வாக்கெடுப்புக்கு எதிராகவே உள்ள னர்.

அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள ஜனாதிபதி முயல்கிறார். ஆனால் அவரது கட்சியினர் அதை விரும்பவில்லை. சந்தி ரிகாவுக்குப் பின்னால் நான்கு நபர்களே உள்ளனர். மங்கள சமரவீர, லக்ஸ்மன் கதிர்காமர், ரத்னசிறி விக்கிரமநாயக்க, அனுரா பண்டாரநாயக்க ஆகியோரே அந்த நால்வர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சுதந்திரக் கட்சியினர் சந்திரிகா, அரசியலி லிருந்து ஓய்வுபெறவேண்டும் என்றே எண்ணி வருகின்றனர் என்று திஸநாயக்க தெரிவித் துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
யாழ்  கொழும்பு
தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,
வானத்தில் உங்கள் நண்பன்...

# மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையருக்கு காரணமின்றி மரணதண்டனை விதிப்பது ஏன்?

மத்திய கிழக்கு நாடுகளில் பணி புரியும் இலங்கையர் உரிய காரணங்கள் அறிவிக்கப்படாமலேயே மரண தணடனைக்கு உள்ளாக்கப்பட்டு வருவது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்னதேரர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

சபாநாயகரின் அனுமதியுடன் அவர் இவ்விடயம் குறித்து சபையில் கவனயீர்ப்பு பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், விக்டர் கொரயா எனும் பெயருடைய இலங்கைப பணியாளர் ஒருவருக்கு சவூதி அரேபயாவில் மரண தண்டனை விதிக்கப் பட் டுள்ளது. இது தொடர்பாக ஆசிய மனித உரிமை ஆணைக் குழு இலங்கை அரசாங்கத்திற்கும், மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் அறிவித்திருப்பதாக தெரியவருகிறது.

இவருக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கான காரணம் அவரது குடும்பத்தினருக்கோ நாட்டுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை.

இதேநேரம் புத்தரின் படம் பதிக்கப் பட்ட சிறு அட்டையொன்றை வைத்திருந்த இலங்கைப் பணியாளரொருவருக்கு சவூதி அரேபியாவில் கசையடி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தண்டனைகள்இலங்கையருககு கடந்த இரு மாதங்களில் பல சந்தர்பபங்களில் வழங்கப்பட்டிருக்கின்றன. இதைவிட மேலும் ஆறு பேருக்கு மரணதண்டனை நிறை வேற்றப்பட்டிருக்கிறது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-7,9)

# ஐ.தே.கட்சி சார்ந்த தொழிற்சங்கங்கள்மீது அரசுபழிவாங்கமுயற்சி!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் மீதும் அவற்றில் அங்கத்துவம் வகிப்பவர்கள் மீதும அரசாங்கம் பழிவாங்கல நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அந்தக கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சாதாரண சட்டங்களின் படி தொழிற் சங்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களை இடமாற்றம் செய்ய முடியாது. இது ஒரு வழமையான நடவடிக்கையாகும்.

குறிப்பாக சட்டக் காரணங்களின்றி இடமாற்றம் செய்யப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். எமது கட்சியுடன் தொடர்புடைய தேசிய ஊழியர் சங்கம் உட்பட எமக்கு சார்பான தொழிற் சங்க உறுப்பினர்களை பழிவாங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எமக்குத் தெரியவந்துள்ளது.

இந்த நிலை தொடரும் பட்சத்தில் அரசியல் ரீதியாக பல முடிவுகளை நாம் எடுக்க நேரிடலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (7-9)

# பயிற்சிப் பட்டறையும் மாதாந்த ஒன்று கூடலும்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாவட்ட ரதியாக நடாத்திவரும் முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையும் மாதாந்த ஒன்று கூடலும் என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறை நிகழ்வு நேற்று முனதினம் உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்கள உள்ளரங்கில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக் கப்பட்டது.

வவுனியா மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வருகின்ற இப்பயிற்சிப்பட்டறை நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப பணிப்பாளா் வ.றீகன கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்ப பிள்ளைப்பருவ, கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன், வலய உதவிக்கல்விப பணிப்பாளர் கணேசபாதம், வடக்கு -கிழக்கு மாகாண முன்பள்ளி கழக மேமபாட்டு நிலையத் திட்ட முகாமையாளர் கணேசலிங்கம், வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம், வவுனியா நகர பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத தலைவர் சேனாதிராசா மற்றும் 8 மாவட்டங்களின் முதன்மை ஆசிரியர்கள், பிரதேச வலய இணைப்பாளர்கள ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகனின் சுடரேற்றலுடன் ஆரம்பமாகிய இந் நிகழ்வு வவுனியா தெற்கு வலய முன்பளளிக் கல்வி மேம்பாடு நிலைய இணைப்பாளர் திருமதி அருள்வேல் நாயகியின் தலைமையில் நடைபெற்றது.

ஆசியுரைகள், சிறப்புரைகள், நிறைவுரைகள் என்பவற்றுடன் நிகழவுகள் இனிது நிறைவுபெற்றதையடுத்து, முன்பள்ளி முதன்மை ஆசிரியர்கள், இணைப்பாளர்களுக்கான சிறப்பு நிபுணத்துவம் வாய்ந்த வளவாளவர்களினால் மேலதிக பயர்சிகள் வவுனியா மாவட்ட தமிழர புனர்வாழ்வுக்கழக அனுசரனையுடன் வழங்கப்பட்டு வருகின்றன. (க)

# மருதங்கேணி வைத்தியசாலைக்கு சு.சேவைகள் பணிப்பாளர் விஜயம்

(மருதங்கேணி

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட யாழ்.பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வைத்திய அதிகாரிகள் மற்றும்ஊழியர்களுடன் வைத்தியசாலையின் தேவைகள், குறைபாடுகள பற்றிக் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையின் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளைச் செய்வதாகவும் தெரிவித்தார்.

முற்றாக அழிந்து போயுள்ள உடுததுறை ஆரம்ப சுகாதார நிலையத்தை வேறொரிடத்தில் அமைத்துத் தருவதாகவும், செம்பியன் பற்றில் ஆரம்ப சுகாதார நிலையமொன்று அமைத்துத் தருவதாகவும், முற்றாகச் சேதமுற்ற முள்ளியான் மருந்தகத்தைப் புனரமைப்பதறகான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் உறுதி கூறினார். (து-35)

# துப்பாக்கி முனையில் கப்பம் பெறமுயன்ற மூவர் கைது!

(வவுனியா)

வவுனியாவில் பலவந்தமாக கப்பம் பெற முயற்சித்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவர் பெண்களாவார்கள். சில நாட்களுக்கு முன்னர் கைத்துப்பாக்கி சகிதம் வந்த இருவர் ஐந்து இலட்சம் ரூபாவை கப்பமாகக் கோரியதுடன் தர மறுத்தால கொலை செய்துவிடுவோம் என மிரட்டிவிட்டுச் சென்றனர்.

அது பற்றி நெளுக்குளம் வர்த்தகர் ஒருவர் வவுனியா பொலிஸாருக்கு புகார் தெரிவித்தார். கடந்த வெள்ளிக் கிழமையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கப்பம் கேட்ட போது ஒரு இலட்சம் வருவதாகவும் தனது வர்த்தக நிலையத்திற்கு மாலை வருமாறு குறிப்பிட்ட வர்த்தகர் அவர்களிடம் கூறியதுடன் இவ் விடயத்தை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினார்.

பொலிஸார் சிவில் உடையில் அங்கு மறைந்திருந்தபோது குறிப்பிட்ட நேரத்தில் வாலிபன் ஒருவனும் மூன்று பெண்களும் கப்ப பணத்தை பெற்றுக்கொள்ள நெளுக்குளம் வர்த்தக நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்கள் பணத்தை பெற்றுக் கொண்டபோது மறைந்திருந்த பொலிஸாரினால் கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான விசாரணை நடைபெற்று வருகின்றது. மூவரிடமிருந்தும் கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் கொழும்பு, கண்டி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பல கொள்ளை தொடர்பான சம்பவங்களில் இவர்களுக்குத் தொடர்புகள உண்டா என்பது குறித்தும் விசாரணைகள் நடைபெறுகின்றன. (க)

# இராசி பலன்

**28.03.2005**

**பங்குனி 15, திங்கட்கிழமை**

**சுவாதி பின்னிரவு 1.17 மணிவரை**

**திருதியை பின்னிரவு 1.58 மணிவரை**

**இராகுகாலம் 07.43 - 09.13 மணிவரை**

**சுபநேரம் 12.13 - 1.43 மணிவரை**

**கரிநாள்**

| | |
|---|---|
| மேடம் | தேகநலன், காரியஅனுகூலம், பெருமையடைதல், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | புதிய சந்தை, தொழில்ஆர்வம், கருமங்கள்கைகூடும், மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | தாழ்ந்த சுபாவம், புதிய விடயம், போசன நன்மை, முயற்சி தாமதம். |
| கடகம் | உடல் நலக்குறைவு, திடீர் நன்மை, வாக்குமேன்மை, மனப்பயம். |
| சிங்கம் | சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், பிரயாண நன்மை, மனமகிழ்ச்சி. |
| கன்னி | நண்பர்கள் விரோதம், விவாதம், தன விரயம், காரிய தாமதம். |
| துலாம் | சயன சுகம், மேன்மை, நல்ல முயற்சி, பிரயாணம். |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், சுபகாரியச் செலவு, நிலைமாற்றம், மனக்கிலேசம். |
| தனுசு | சுபநிகழ்வு, தனலாபம், குடும்பசுகம், நல்ல முயற்சி. |
| மகரம் | உற்சாகம், பிறருக்கு உதவுதல், தொழில் விருத்தி, நல்ல செய்தி. |
| கும்பம் | பிரயாணம், மனக்குழப்பம், பித்தரோகம், காரிய தாமதம். |
| மீனம் | உடல் வியாதி, வீண் பகை, காரியதாமதம், திருடர் பயம். |

**பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II கால்நடை வைத்திய ஆராய்ச்சி உற்பத்தி உத்தியோகத்தர், கால்நடை வைத்தியர், கால்நடை உத்தியோகத்தர் ஆகிய பதவிகளிற்கு வயது 20-30 வயதிற்கிடைப்பட்ட தகமையுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், இல. 1120 கற்றம்பே, பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (க-21)

# சோமவன்ச எந்நேரமும் கைது செய்யப்படலாம்!

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவை எச்சந்தர்ப்பத்திலும் கைது செய்வதற்கான உத்தரவு கிடைக்கப் பெறலாம்.

அதற்காக தயாராக இருக்குமாறு அரசின் மேல் மட்டத்துடன் தொடர்புடைய பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, அதிகாரி ஒருவர் தமது அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாக சிங்கள "இருதின" வார இதழ் தெரிவித்துள்ளது.

மேறபடி புலனாய்வுப்பிரிவு உயரதிகாரி தமது ஏனைய அதிகாரிகளுக்கு தெரிவித்திருப்பதாவது, அரச சொத்துக்களை சேதப்படுத்தியமை, வங்கிக் கொள்ளை, கொலை உட்பட பல குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஜே.வி.பியின் தலைவர் சோமவனச அமரசிங்கவை கைது செய்வதற்கு விரைவில் தனக்கு உத்தரவு கிடைக்கப்பெறலாம்.

எனவே அவரது பயணங்கள் அவர் அதிகமாக நடமாடும் இடங்கள் தொடர்பாக விழிப்பாக இருக்குமாறும் உயரதிகாரி தமது பிரிவு அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளதாகவும் அந்த சிங்கள வார இதழில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மரபணு சோதனை வழக்கு; வவு.நீதிமன்றம் இன்று தீர்ப்பு

(வவுனியா)

துளக்கிகன் என்ற பெயருடைய 9 மாத ஆண் குழந்தை தொடர்பான சர்சசை வவுனியா மாவட்ட நீதிமன்றுக்கு வந்துள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த திருமணமாகாத ஒரு யுவதி தனது குழந்தைக்கு தகப்பன் யார் என்பதினை இனமகாட்டி நதிமன்றில் பராமரிப்பு வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்திருந்தார்.

மாவட்ட நீதிவான் மா.இளஞ்செழியனின உத்தரவின் பேரில் மரபணு பரிசோதனை கொழும்பில் நடைபெற்றது.

குழந்தை, தாய், குற்றம்சாட்டிய நபர் ஆகியோரின் இரத்தங்கள் மரபணு பரிசோதனைக்குட்படுத்தப் பட்டு அறிக்கை நீதிமன்றுக்கு வந்துள்ளது. இன்று திங்கட்கிழமை மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது தீர்ப்பு அறிவிககப்படும் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியர் மயாதீ குணசேகர, காயா ஆர்.ரணவக்க இந்த மரபணு பரிசோதனையினை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# நிர்வாகிகள் தெரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய தேவஸதான திருப்பணிக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த சனிக்கிழமை அறங்காவலர் வி.இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்படி தலைவர் சோ.சிவலிங்கமும், செயலாளராக ந.இராசதுரையும் பொருளாளராக எஸ்.கே.சண்முகலிங்கமும் உபதலைவராக ப.கனகலிங்கமும், உபசெயலாளராக சி.இரத்தினசபாபதியும், உப.பொருளாளராக க.குலசேகரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

போசகர்களாக வி.இராமநாதன், சிவஸ்ரீ.சி.மனோகரக்குருக்கள், நா.அருளலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் (க-126)

# தந்தை செல்வாவின் 107ஆவது பிறந்தநாள் நினைவு நிகழ்வு

(தென்மராட்சி)

தந்தை செல்வாவின் 107ஆவது பிறந்தநாள் நினைவுப் பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9மணிக்கு தந்தை செல்வா நினைவாலயத்தில்நடைபெறவுள்ளது.

தநதை செல்வா நினைவு அறங்காவல குழுவின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இப் பிரார்த்தனை நிகழ்வு அறங்காவல் குழுவின் தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் ஆண்டகையுமான கலாநிதி பேரருட் எஸ். ஜெபநேசன் அடிகள் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அனைத்து மதப் பெரியார்கள, தந்தை செல்வாவின அபிமானிகள் மற்றும் உறவினர்களும் பங்குகொள்வார்கள்.

அதேசமயம், யாழ். சுண்டுக் குழியிலுள்ள பரியோவான் தேவாலயத்தில் தந்தை செல்வா நினைவு ஆராதனையும் விசேடசொற்பொழிவும அன்றைய தினம் பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறும். (க-16)

# தொடர்ந்தும் பதவியிலிருக்க துடிக்கிறார் ஜனாதிபதி...

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில், அந்தப் பதவிக்குரிய காலத்தின் அந்தத்தில் நிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, என்ன அரசியல் குளறுபடிகளை - தகிடுதத் தம்களை - பண்ணியாவது தாம் அதிகாரத்தில் தொடர்ந்து ஒட்டிக்கொள்வதற்கு துடியாய்த் துடிக்கிறார்.**

அரசமைப்பு ஏற்பாடுகளின் படி, இந்த வருட இறுதியில் அவர் பதவியிலிருந்து இறங்க, வேறு ஒருவருக்கு அப்பதவி போக வேண்டும்.



தமது இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பித்த விவகாரத்தில், சட்டத்தில் இருக்கும் ஓட்டையைப் பயன்படுத்தி வேண்டுமானால் இன்னும் ஒரு வருடத்துக்கு அடுத்த வருட இறுதிவரை இந்தப் பதவியில் அவர் நீடிக்க முடியும். அதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால், அதற்கு அப்பால் அவர் இந்தப் பதவியில் இருக்கவே முடியாது என்பது தற்போதைய அரசமைப்பில் தெளிவாக உள்ளது.

எனவே, அரசமைப்பை எப்படியேனும் மாற்றியாவது தம்மை அதிகாரத்தில் வைத்துக்கொள்ள பகல் கனவு காண்கின்றார் சந்திரிகா.

இந்தவிடயத்தில் அரசமைப்பை அவர் மாற்றுவதாயின், அதற்கு அரசமைப்பில் உள்ள வழிமுறைகளை அவர் நாடவேண்டும். ஆனால், அதையும் மீறி, அரசமைப்பை அதில் உள்ள ஏற்பாடுகளுக்கு மாறான முறையில், மாற்றவே அவர் எத்தனிக்கின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

தாம் அதிகாரத்தில் நீடிக்க வேண்டும் என்ற அவாவை அவர் நிறைவு செய்வதாயின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் மூன்றாவது தடவையும் ஒருவர் நீடிக்க வழிசெய்யும் விதத்திலோ அல்லது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, வேறு ஆட்சி முறையின் கீழ் அதிகாரத்தைத் தான் வைத்துக்கொள்ளக் கூடிய ஓர் ஆட்சி முறையை உருவாக்கும விதத்திலோ -அரசமைப்பை அவர் மாற்றியாக வேண்டும். இத்தகைய அரசமைப்பு மாற்றங்களைச் செய்வதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியையும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவையும் பெறவேண்டும் என அரசமைப்பு தெளிவாகக் கூறுகின்றது.

தனது உத்தேசத் திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் உரிய பெரும்பான்மையைப் பெறமுடியாத ஜனாதிபதி குமாரதுங்க, சர்வஜன வாக்கெடுப்பு என்ற பெயரில் ஒன்றை நடத்தி, மக்கள் அனுமதியைப் பெற்றுவிட்டேன் என்று காட்டி, அதை வைத்துக் கொண்டு நீதித்துறையின் உதவியோடு, அரசமைப்பை அதில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் மாற்றுவதற்கு முயல்வார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அரசமைப்புத் திருத்தத்துக்கான சட்ட ரீதியான நடவடிக்கையின் ஒரு கட்டமாக இந்த சர்வஜன வாக்கெடுப்பை அவர் நடத்துவதாயின், அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அந்தச் சட்ட மூலத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவை அவர் பெறவேண்டும். அது சாத்தியமில்லை என்பதால் அந்த வகையில் இந்தச் சர்வஜன வாக்கெடுப்பை அவர் நடத்த முயலமாட்டார். மாறாக,

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தில் மக்களின் கருத்தை அறிவதற்காக, அந்த விவகாரம் சம்பந்தமாகச் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதறகு விசேட உரிமை - அதிகாரம - ஜனாதிபதிக்கு உண்டு எனத் தெரிவிக்கும் அரசமைப்பு ஏற்பாட்டை அவர் பயன்படுத்துவார்.

தமக்குள்ள அந்த அதிகாரத்தின் கீழ் இந்த சர்வஜன வாக்கெடுப்புக்கு அவர் உத்தரவிடுவார். அந்த சர்வஜன வாக்கெடுப்பின் முடிவு அவர் எதிர்பார்த்த - அவர் விரும்புகின்ற பெறுபேறைத் தரக்கூடும். ஆனால, மக்கள் கருத்தறிவதற்காகத் தாம் நடத்தும் சர்வஜன வாக்கெடுப்பின் பெறுபேறை மட்டும் வைத்துக்கொண்டு, தற்போதைய அரசமைப்பை அதில் அதற்கென உள்ள ஏற்பாடுகளைக் கவனிக்காமல் - அல்லது புறந்தள்ளி எப்படி ஜனாதிபதி சந்திரிகா மாற்றப் போகின்றார்? தமது போக்குக்குச் சாதகமாக நீதித்துறையை அவர் எப்படி வளைத்துப் போடப் போகின்றார்? காலம் பதில் கூறப்போகின்ற விடயங்கள இவை. எது, எப்படியென்றாலும் அவர் நாடப்போகின்ற வழிமுறையை, இலங்கை மட்டுமல்லாமல் சர்வதேச உலகமும் அவதானமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்பதை அவர் மறக்காமல் இருந்தால் சரி!. (க)

நன்றி இணையத்தளம்

# பாதிப்புற்ற மக்கள் வழமை நிலைக்கு திரும்பும்போது சிக்கல்கள் ஏற்படுகிறது

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் ஏற்படடு மூன்று மாதங்கள் கடந்துவிட்டபோதிலும், பாதிக்கப்பட்ட மக்கள் வழமை நிலைக்குத் திரும்பும் நிலையில் சில சிக்கல்கள் தோன்றியிருப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக்ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் 90 வீதமானோரது வாழக்கைநிலை வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆயினும் 180 நலன்புரி நிலையங்களில் இன்றும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து வருவதாகவும், இவற்றில் பெரும் பாலனவை மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் இயங்கி வருவதாகவும் ரணவிராஜா தெரிவித்தார்.

இம்மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் விடயத்தில் அரசு மிகவும் கரிசனையுடன் செயற்பட்டு வருவதாகவும், எனினும் நிவாரண உதவிகள் வழங்கும்போது உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவை சென்றடைகின்றனவா என்பதைக் கண்டறியும் பொருட்டு பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நிவாரணங்கள் வழங்கப்படும் போது உரிய வகையில் நிர்வாகததுறை செயற்படவில்லை என எவரேனும் குறை கூறுவதாக இருநதால் தற்போதைய நிலைமைகளை அவதானித்த பின்னர் கருத்துக்களை வெளியிட வேண்டுமென்றும் கூறிய அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் யாவும் உரிய முறையில் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களுக்கு வாடகை வீடுகளில் தங்குதவற்கு வசதியாக வாடகைக் கட்டணம் ஒன்றை வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இவ் வாடகைக் கட்டணத்தை மூவாயிரம் வரை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது கூடாரங்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கு 2 மாதங்களுக்குள் 30ஆயிரம் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க உத்தேசித்துள்ளதாகவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(க-7)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொக்குவில் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றப்படவுள்ளது.

அதன்படி இன்று திங்கட் கிழமை முற்பகல் 9.00மணி முதல் 10.30மணி வரை கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் உள்ள புகையிரத வளர்பிறை சனசமூக நிலையத்திலும், முற்பகல் 10.45 மணி முதல் 12.15மணி வரை இருபாலை வீதியில் உள்ள ஞானவீரா சனசமூக நிலையத்திலும் நண்பகல் 12.30மணி முதல் 2.00மணி வரை நெட்டிலிப்பாய் ஸ்ரீகணேஷ் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி மருந்தேற்றப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல 9.00மணி முதல் 10.30 மணி வரை கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்திலும், முற்பகல் 10.45மணி முதல் 12.15மணி வரை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஸ்ரீவாகீஸவரி சனசமூக நிலையத்திலும் நண்பகல் 12.30மணி முதல் 2.00மணி வரை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்திலும் தடுப்பூசி மருந்தேற்றப்படவுள்ளது. (க)

# மக்கள்படும் கஷ்டத்துக்கு கூட்டமைப்பே காரணமாம்

## ஐ.தே.க. எம்.பி பந்துல

(கொழும்பு)

மக்கள் எதிர்நோக்கிவரும் கஷ்ட நிலைமைக்கு கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம வகிக்கும கட்சியினரே காரணம் என ஐககிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிகைகயிலேயே அவர் மேறகண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமிப் பேரலை ஏற்பட்டு மூன்று மாத காலம் பூர்த்தியாகும் நிலையில பாதிக்கப்பட்ட மக்கள் கூடாரங்களிலே வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்துவரும் பருவமழை காலத்தில் கூடாரங்களில் வாழும் இம் மக்கள் பெரும் சிரமங்கள் எதிர்நோக்குவர் என சுட்டிக்காட்டிய அவர் மக்கள் மீது அரசினால் பெரும் வரிச் சுமை திணிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (க-8)

# மின்சாரசபை ஊழியர்கள் இன்றுமுதல் வேலைநிறுத்தம்?

(கொழும்பு)

தம்மால் சமர்ப்பிக்கப்படட கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும என்ற கோரிக்கையை முன்வைத்து மின்சார சபை ஊழியாகளின் ஒருங்கிணைந்த சம்மேளனம் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்த வேண்டுகோளை அது விடுத்துள்ளது.

ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சம்மேளனத்தின் பேச்சாளர் மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். அத்துடன் இன்றுகூடும் அமைச்சரவை எமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலை அளிக்க வேண்டும்.

அவ்வாறு எமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சரியான பதிலைத்தர தவறும் பட்சத்தில் இன்று மாலை நாடுமுழுவதையும் இருளில் மூழ்கடிக்கப்போவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலநதுகொண்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதி இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 30சதவீதமான பங்குகள் தற்சமயம் திறைசேரி வசம் உள்ளது. அப் பங்குகளை மூன்றாம் தரப்பிற்கு விற்பனை செய்வது குறித்து இன்று அமைச்சரவை முடிவெடுக்கவுள்ளது.

இம் முடிவு உடனடியாக இரத்துச்செய்யப்பட வேண்டும். எமது கோரிக்கையை மீறி அரசாங்கம இந்தத் திட்டத்தை மேற்கொள்ளும் பட்சத்தில் இன்று மாலை முதல் நாடளாவிய ரீதியில் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தவுள்ளோம் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

(க-9)

# பட்டதாரிகளுக்கு மே மாதம் நிரந்தர நியமனம் வழங்கப்படும்

அரசாங்க சேவையில் அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட படடதாரிகள, அரச சேவையையும், தேசிய பொருளாதாரத்தையும் பலப்படுத்த முன்வர வேண்டுமென இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் மே மாதத்தில் நிரந்தர நியமனம் வழஙகப்படவுள்ளது. பட்டதாரிகள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படுமென ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் இச்சங்கம் தெரிவித்துள்ளது.

இலவச கல்வி முறையை அரசாங்கம் தனியார் மயப்படுத்தாதென்று ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார்.

பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்துள்ளனர்.

வேலை வாய்பபுக்களை வழங்குவதில் முறையான தேசியக் கொள்கையை வகுப்பதற்கும் ஜனாதிபதி இணங்கியிருக்கிறார்.

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் விரைவில் பேச்சுவார்த்தையையும் இச் சங்கம் நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## திருடன் மடக்கிப்பிடிப்பு

(திருநெல்வேலி)

கொடிகாமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவரின் துவிச்சக்கரவண்டியை திருடியவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து சாவகச்சேரி பொது கலாச்சார சபையிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

வவுனியாவைச சேர்ந்த அப்துல் அஜத் (வயது-27) என்ற நபரே துவிச்சக்கர வண்டியை திருடியவர் ஆவார். (43)

## இன்று ஒரு தகவல்

# பெண்களின் முதுமை

ஒரு நகரப் பேருந்து போய்க்கொண்டிருந்தது. கூட்டமும் சற்று அதிகம் தான். ஒரு பெண் சற்று சிரமத்துடன் மேலுள்ள கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றாள். நடத்துனர் அதைப் பார்த்தார். "அந்த அம்மாவுக்கு யாராவது ஒரு இடம் கொடுங்களேன்" என்றார்.

ஒருவர் எழுந்து இடம் கொடுத்தார். அந்தப் பெண்ணும் அந்த இடத்தில் அமர்ந்தாள். எல்லாம் சரி! இப்போது அப்பெண்ணின் முகம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? கொஞ்சம் நன்றி உணர்வுடன் அந்த நடத்துனரைப் பார்த்திருப்பாள். தனது இருக்கையை விட்டுக் கொடுத்தவரைப் பார்த்திருப்பாள். இப்படித்தான் நீங்கள் நினைப்பீர்கள் இல்லையா?

ஆனால் அப்படியில்லை. மிகவும் கோபமாக அந்த நடத்துனரை முறைத்துப் பார்த்துவிட்டு அந்த இடத்தில் அமர்ந்தாள். கடைசிவரை அவளது முகத்தில் கடுகடுப்பு மாறவே இல்லை.

ஒரு இடத்தில் பஸ் நின்றது. அந்தப் பெண் இறங்கினாள். நானும் இறங்கினேன். கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அந்தப் பெண்ணருகே போனேன். "ஏனம்மா? அந்த நடத்துனர் மிகவும் இரக்கப்பட்டு உங்களுக்கு ஒரு இடம்கொடுக்கச் சொன்னாரே... அவர் மிகவும் நல்லவர் இல்லையா?" என்றேன். "நல்லவர்தான் யார் இல்லை என்றது" என்றாள்.

"அப்படி என்றால் அவர் அப்படிச் சொன்னதும் நீங்கள் மிகவும் கோபப்பட்டீர்களே" என்றேன்.

"பின்னே என்ன ஐயா! என்னைப் பார்த்து அம்மா என்கிறாரே. என்னைப் பார்த்தால் அவ்வளவு வயசானவளாத் தெரியுதா? அந்த அம்மாவுக்கு யாராவது இடம் கொடுங்களேன் என்றாரே அதுதான் எனக்குக் கோபம். இப்ப நீங்களே சொல்லுங்க எனக்கு எத்தனை வயசிருக்கும்?" என்றாள்.

நான் என்ன அந்தளவிற்கு விபரமில்லாத ஆளா? மனசிலே என்ன தோன்றியதோ அதில் ஒரு 20 வயதைக் குறைத்துவிட்டு சொன்னேன். "என்ன ஆகக் கூடினால் ஒரு 20 அல்லது 21 வயதிருக்கும்" என்றேன்.

நீங்கள்தான் ஐயா "ஜீனியஸ்" என்று சொல்லிவிட்டு மிகவும் சந்தோஷத்துடன் போய்விட்டாள்.

இதனை எதற்குச் சொல்கிறேன் என்றால் முதுமையை யாரும் ஆசைப்பட்டு அழைப்பதில்லை. ஆனால் அது ஆசைப்பட்டு எம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதுவும் விபரம் தெரியாமல் பெண்களிடம் கொஞ்சம் விரைவாகவே வந்து விடுகிறது. ஆண்களிடம் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெண்களுக்கு முதுமை விரைவிலேயே வந்து விடுகிறது. இது ஒரு பொதுவான அபிப்பிராயம்.

ஆனால் விஞ்ஞான ரீதியாக இக் கூற்று உண்மையா?

அதனைத் தெரிந்து கொள்வதற்காக அமெரிக்காவின் 'யேல்' பல்கலைக்கழகத்தில் ஒரு ஆராய்ச்சி நடைபெற்றது. அதிலிருந்து சில முக்கியமான தகவல்கள் பெறப்பட்டன.

"மனித உடம்பிலுள்ள செல்கள் தொடர்ச்சியாக இறந்து கொண்டே இருக்கும். இதை "செல்களின் இனப்பெருக்கம்" என்பர். ஒரு குறித்த வயது ஆகும் போது பெண்களுக்கும் ஆண்களுக்கும் புது செல் உருவாவது குறைந்து விடுகிறது. அந்நேரத்தில் உடம்பிலுள்ள தசைகள் சுருங்க ஆரம்பிக்கின்றன. இது தொடர்பாக நடைபெற்ற ஆராய்ச்சியிலிருந்து இந்த செல்களின் இயக்கம் ஆண்களை விட பெண்களுக்கு விரைவாகவே குறையை ஆரம்பித்து விடுகிறது என்பது தெரிய வந்துள்ளது.

பொதுவாக, ஆண்களுக்கு 35 வயதிலும் பெண்களுக்கு 30 வயதிலும் இந்த இயக்கம் குறையலாம் என்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

பலர் நினைப்பதுண்டு குழந்தை பெறுவதனாலேயே பெண்கள் விரைவில் முதுமை அடைகிறாங்கள் என்று ஆனால் அவ்வாறில்லை.

பெண்கள் உடலில் விரைவில் செல்கள் இறப்பதைத் தடுப்பதற்காக 'ஜெனிடிக் கோடிங்' எனும் துறையில் தற்போது ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

ஒரு நிருபர் சினிமா நடிகை ஒருவரை பேட்டி காணச் சென்றார். அந்த நடிகை 30 வருடமாக சினிமாவில் நடிப்பவர். இவர் கேட்கக கூடாத கேள்வி ஒன்றைக் கோட்டார். அதாவது உங்கள் வயது என்ன என்றார்.

அந்த நடிகையும் இந்த ஜூன் வந்தா 20 முடிந்து 21 ஆரம்பம் என்றார். நிருபர் திடீரென புத்தி கலங்கின மாதிரி தன் தலையில் குட்டினார். நடிகை "என்ன நான் ஏதாவது தப்பாகச் சொல்லி விட்டேனா? என்பதில் சரியில்லையா?" என்றார்.

அதற்கு நிருபர் "உங்கள் பதிலில் தவறில்லை என் கேள்வியில் தான் தவறு. இந்தக் கேள்வியை 20 வருடங்களுக்கு முன்னர் உங்களிடம் கேட்டிருக்க வேண்டும். நான் ரொம்ப லேற் அது தான் தலையில் குட்டுகிறேன்" என்று விட்டு மறுபடியும் குட்டிக் கொண்டார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# போரியல் ஆவணங்களை பாதுகாக்க சகல தமிழ்மக்களும் முன்வரவேண்டும்

## தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம்

(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் அனைவருமே போரியல் ஆவணங்களைப் பாதுகாக்கவும் பேணவும் முன்வரவேண்டும் என்று தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி பளை இத்தாவிலில் போரியல் வரலாற்றுச் சான்றுகளை எடுத்தியம்பும் அரும்பொருள் காப்பகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் போரியல் ஆவணங்களைப் போராளிகள் மட்டுந்தான் பேண வேண்டும என்ற நிலையில்லாமல் தமிழ்மக்கள் அனைவருமே போரியல் ஆவணங்களைப் பாதுகாக்கவும், பேணவும் முன்வரவேண்டும்.

இலங்கைப் படைகளின் ஆனையிறவுப் படைத் தளத்தினை வீழ்த்த தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலை தாக்குதல் - 03 நடவடிக்கையின் ஒருகட்டமாக நடத்தப்பட்ட குடாரப்பு தரையிறக்கம் (26.03.2000) நடந்த 5 ஆம் ஆண்டு நினைவு நாளில் இந்நிகழ்வு நடைபெற்றது.

முதன்மைச் சுடாினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனும் தமிழீழ தேசியக் கொடியினை வடமுனை கட்டளைத் தளபதி கேணல் தீபனும ஏற்றிவைத்தார்கள்.

மாவீர்களை நினைவுகூரும் உருவப்படத்திற்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். அனனை பூபதியின் உருவப்படத்திற்கு கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.பசுபதிபபிள்ளை ஈகைச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். நினைவுக் கல்லினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வட முனைத் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் ஜொி ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர். அரும்பொருள் காப்பகத்தினை கேணல் தீபன் நாடாவெட்டி திறந்து வைத்தார்.

அரங்க நிகழ்வுகள் தமிழீழ அரும்பொருள் காப்பக பொறுப்பாளர் ஆதித்தவர்மன் தலைமையில் நடைபெற்றன. கருத்துரைகளை யாழ். மாவட்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் அருள், பளைக்கோட்ட கல்வி அலுவலகர் இராமலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் நிகழ்த்தினார். அரும்பொருள் காப்பக உருவாக்கத்தில் பங்களித்த கலைஞர்களுக்கு கேணல் தீபன், லெப்.கேணல் ஜொி ஆகியோர் பாிசில்கள் வழங்கினர். (க-8)

# தம்பி பிரபாகரன் உள்ளிட்ட 2000 புலிகள் உலவிய எங்கள் தோட்டம்!

## நினைவு கூருகின்றார் கொளத்தூர் மணி

(புதுடில்லி)

**தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் புதிய பார்வை என்ற இதழுக்கு தமிழீழம் நன்கறிந்த தமிழ்நாட்டு ஆதரவாளரும் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவருமான கொளத்தூர் தா.செ.மணி செவ்வி அளித்துள்ளார்.**

**அந்த செவ்வியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தனக்கும் உள்ள அந்த நாள் உறவுகளை உள்ளார்ந்த உறவோடு பதிவு செய்திருக்கிறார். செவ்வியின் சில பகுதிகள் வருமாறு,**

***கேள்வி:*** புலிகள் இயக்கத்துடன் உங்களுக்கு எப்போது தொடர்பு ஏற்பட்டது?

**பதில்:** துவக்கத்தில் பயிற்சி பெறுவதற்காக விடுதலைப்புலிகள் தமிழகத்தில் இடத்தைத் தேடிக் கொண்டிருந்தபோது கொளத்தூரில் எங்கள் தோட்டத்தை வந்து பார்த்தார்கள்.

புலிகள் இயக்கத்தின் முன்னோடிகள். மூன்று ஆண்டு காலம் எங்களுடைய தோட்டத்தில் பயிற்சி நடந்தது. சுமார் இரண்டாயிரம் புலிகள் அங்கு பயிற்சி எடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

அப்போது அவர்களுக்குப் போதுமான பொருளாதார வசதியில்லாத நிலையில் நன்கொடை திரட்டி அவர்களுக்கு உதவினோம். 1984ஆம் ஆண்டு ஜனவாி யிலிருந்து 1986ஆம் ஆண்டு நவம்பர் வரை முகாம்கள் நடந்தன. தம்பி பிரபாகரன வரை பலர் தங்கியிருந்தார்கள். அப்போதிலிருந்து அவர்களுடன் தொடர்பு உண்டானது.

***கேள்வி:-*** பிறகு தமிழ் ஈழப் பகுதிக்குப் போய் வந்தீர்களே?

**பதில்:-** அதன்பிறகு 1989ஆம் ஆண்டுடில் பிரபாகரன் சுடப்பட்டதாகச் செய்திகள் பரவியிருந்தன. வைகோ போய்விட்டு வந்த பிறகு ஈழத்திற்கு நான் போனேன். 1989ஆம் ஆண்டு இறுதிக்குள் காட்டுப் பகுதிக்குள் புலிகள் தங்களுடைய இயக்கத்திற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துவிட்டார்கள்.

நகரப் போராட்டத்தில் இறங்குமுன்பு தங்களுடைய வளர்ச்சியைத் தங்களுடைய ஆதரவாளர்களுக்குக் காட்டினால் நல்லது என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்தது. அதனால் என்னை அழைத்திருந்தார்கள. அழைப்பை யொட்டி நானும் அங்கு போனேன். புலிகள் இயக்கத்தின் தொடக்க காலத்தில் ஒரேயொரு எஸ்.எம்.ஜி.ரகத் துப்பாககியை வைத்திருந்த காலத்திலிருந்த எனக்கு அவர்களுடன் அறிமுகம் உண்டு. நான் அங்கு போன போது நவீன ஆயுதங்களைக் கையாண்டு கொண்டிருந்தனர். எஸ்.எம்.ஜி. ரக துப்பாக்கிகளையெல்லாம் ஒரு மூலையில் ஒதுக்கிக் குவித்து வைத்திருந்தார்கள்.

உண்மையான எஸ்.எல்.ஆர். துப்பாக்கியையே தலை கீழாகக் கவிழ்த்து தொப்பியோடு நினைவிடங்களில் வைததிருந்தார்கள். இதன்மூலம் வளர்ச்சி அடைந்த ஒரு மாறுதலான சூழ்நிலையை உணர முடிந்தது. அப்போது பிரபாகரனும் நானும் எடுத்துக் கொண்ட புகைப் படம் தான் பிரபாகரன உயிரோடு இருப்பதற்கு ஆதாரமாகப் பலரால் கருதப்பட்டது.

தமிழகத்தில் உள்ள பத்திாிகைகளில் அந்தச் செய்திகள வெளிவந்தன. உளவு அமைப்பினர் எங்களுடைய நடவடிக்கைகளைக் கண்காணித்தபடி இருந்தார்கள. 1991ஆம் ஆண்டில் திமுக ஆட்சி கலைக்கப்பட்டதுமே தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் என்னைச் சிறை செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள்.

ராஜீவ்காந்தி சம்பவத்திற்கு முன் நான் சிறையிலிருந்து வெளியே வந்தேன். விடுதலைப்புலிகளுக்கு வெடிமருந்துகள் வாங்கிக் கொடுத்ததாக மாற்றி மாற்றி வழக்குகள் போடப்பட்டன. இதில் தடாவில் ஏழு மாதங்கள் சிறையில் வைக்கப்பட்டேன்.

வேலூர் சிறையிலிருந்து சுரங்கம் வெட்டி புலிகள் தப்பித்த வழக்கில் அவர்களுக்கு உதவியதாக சாியாக ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டேன்.

கர்நாடகவில் எந்தக் கைதியாக இருந்தாலும் நீதிமன்றத்திற்குக் கைவிலங்குடன்தான் அழைத்துச் செல்வார்கள். என்னையும் அப்படி அழைத்துச் சென்ற போது அதற்காக நான் வாதாடிய பிறகு விலங்கிடுவதை அகற்றினர் என்றார். (க)

## பொதுக்கட்டமைப்பை உருவாக்காவிட்டால்

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் விலகுவர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள ஆழிப்பேரலை மீள் கட்டமைப்பிற்கான பொதுக்கட்டமைபபுத் திட்டத்தை இலங்கை அரசு தாமதித்து வருவதால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் விலக நோிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்க எச்சாிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இலங்கை அரசானது, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஒரு பதிலையும் போினவாதிகளான ஜே.வி.பிக்கு ஒரு பதிலையும் கூறி இரட்டை வேடமிடுகிறது. இது தமிழீழ மக்களை ஏமாற்றும் செயலாகும். பொதுக் கட்டமைப்பை அரசு உருவாக்காவிட்டால் நாடாளுமன்ற கூட்டத்தை முற்றிலுமாக புறக்கணிப்பதோடு சர்வதேச சமூகத்திடம் அரசின் உண்மை முகத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அம்பலப்படுத்தும் என்றார். (க-8)

# கஷ்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறை

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

கஷ்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை எவ்வாறு வழிநடத்திச் செல்வது என்பது பற்றிய கலந்துரையாடல் கடந்த 18 ஆம் திகதி சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, தீவகம் ஆகிய கஷ்டப் பிரதேசங்களில் உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற 53 பேருக்கு உடற்கல்வி ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டதையடுத்தே மேற்ப்டி கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பான மகஜரொன்று யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளனிடம் விளையாட்டுத்துறைப் பணிமனையில கையளிக்கப்பட்டதையடுத்து இதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாக அவர் உறுதியளித்தார். (து)

## சுனாமிப் பேரலையால் பாதிப்புற்று நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள

# பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

(இந்தோனேஷியா)

சுனாமியால் மிக மோசமாகப் பதிக்கப்பட்ட இந்தோனேஷியாவின் ஆஷே மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டிருபபதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

ஆஷே மாகாணத்தில், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் பெண்களுக்கான வசதிகள் மிகக் குறைவாகவே இருப்பதாக பெண்கள அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் ஒரே கூடாரங்களிலேயே இரவில் தூங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆண் குடும்ப அங்கத்தவர்களை இழந்த பல பெண்கள் இவ்வாறு இரவைக் கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் தகுந்த பாதுகாப்பும் அவர்களுக்கு இல்லாத நிலை காணப்படுகிறது.

இந்தோனேஷியாவில் சுனாமி அனர்த்தத்தால் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் உயிரிழந்து காணாமல் போயிருப்பதுடன் பலர் வீடு வாசல்களையும் இழந்துள்ளனர். சில கிராமங்களில பூமி அதிர்வு, சுனாமி ஆகியவை அடிக்கடி தாக்கியுள்ளது.

ஆயினும் மதிப்பீடுகளின் அடிப்படையில் பார்க்கும்போது இலங்கை, இந்தியாவை விட குறைவாகவே இந்தோனேஷியாவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சுனாமி ஏற்பட்டு 3 மாதங்கள் நிறைவடைந்ததையொட்டி இந்தோனேஷியா துணை ஜனாதிபதி யுசுப் ராலா நேற்றைய தினம் பாதிக்கப்பட்ட ஆஷே மாகாணத்தை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் கட்டியெழுப்ப ஆஷே தலைவர்களிடம் 40 மில்லியன் பெறுமதியான காசோலையை வழங்கியுள்ளார். (க-7)

# சீரற்ற போக்குவரத்துச் சேவை; காரைநகர் மக்கள் பெரும் சிரமம்

(காரைநகர்)

சீரற்ற போக்குவரத்து தொடர்பாக காரைநகர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டபோதும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என காரைநகர்ப் பகுதி பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகரில் கடந்த சில மாதங்களாக மேற்கு வீதிக்கான போக்குவரத்து சேவை வீதி சீரின்மை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

ஆனாலும் மேற்கு வீதி திருத்தப்பட்ட பின்னர் காரைநகர் கடற்படைத்தள சந்திவரைக்கும போக்குவரத்துச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும், சிலவேளைகளில் பயணிகள் இல்லை எனக் காரணம் காட்டி காரைநகர் வாரிவளவுடன் போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கருங்காலி, பலகாடு, நிலங்காடு பகுதி மக்கள் போக்குவரத்து வசதியின்றி பெரும் சிரமம் அடைகின்றனர்.

மேற்படி அசௌகரியங்களை காரணம்காட்டி காரைநகர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பொதுமக்களாலும் அரச உத்தியோகத்தர்களாலும் சுட்டிக்காட்டியபோதும் தற்போதும் சில வட பிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள் வாரிவளவுடனேயே நிறுத்தப்பட்டு திருப்பப்படுகின்றது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரி சம்பந்தப்பட்ட விடயத்தைக் கவனம் எடுப்பதாகத் தெரிவித்தும் இன்றுவரை பூரணமான சேவை இடம்பெறவில்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிந்துள்ளனர். (க-246)

# அறவழிப்போராட்டக்குழு பாதிப்புற்றோருக்கு உதவி

(தென்மராட்சி)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வியாபாரிமூலை இடைத்தங்கல் முகாமில் அறவழிப் போராட்டக்குழுவினாலும், சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினாலும் தங்க வைக்கப்படவுள்ள பதினைந்து குடும்பங்களுக்கு, அறவழிப்போராட்டக்குழுவின் பிரான்ஸ் நண்பர்களின நிதியுதவியுடன் வானொலிகள், சூட்கேசுகளும் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

அத்துடன் பிரான்சிலுள்ள கர்காஸ் கோனேஸ் நகரத்தில் இருந்து சேகரித்து அனுப்பப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வர்ணம் தீட்டும் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக அறவழிப்போராட்டக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இக்குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிறுவனததினால் உணவுப்பொருள்கள் அல்லாத பொருள்களும் வழங்கப்படவள்ளதாகத் தெரியவருகிறது. (க-16)

# அரச ஊழியர்களுக்கு வீட்டுக்கடனாக ஒரு மில்லியன் ரூபாவை அரசு வழங்கும்?

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டுககடனாக ஒரு மில்லியன் ரூபாவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நான்கு வீத வட்டியுடன வழங்கப்படும் இக்கடன் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என பிரதி நதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசிய சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தை முடித்துவைத்துப் பேசுகையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க சேவை ஊழியர்களின் நலன்களை முறையாகப் பெற்றுக் கொடுக்கக் கோரும் மேற்படி பிரேரணை மீதான விவாதத்தில் ஆளும கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச சேர்ந்த பலரும் உரையாற்றினர்.

பிரேரணை மீதான விவாதத்திற்குப பதிலளித்து உரையாற்றிய பிரதி நிதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அரச ஊழியர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாபபதுடன் அவர்களுக்கு உரித்தான சகல நலன்களையும் பெற்றுக்கொடுப்பதில் முன்னிற்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் தொலைத் தொடர்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொலைத் தொடர்பு வசதிகளை விரிவுபடுத்த ரெலிகொம் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள தொலைத் தொடர்புக் கோபுரம் மூலமாக கிளிநொச்சி, மடுக கந்தை வழியாக தொலைத்தொடர்பு பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுகின்றது.

இதன்மூலம் புதிதாக 500 பாவனையாளர்களுக்கு புத்தாண்டின பின் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவிருப்பதாக யாழ்.ரெலிகொம் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி இணைப்புகளுக காக இதுவரை 15 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளார்கள். இவர்களுக்கும் காலப்போக்கில் இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை எட்டாயிரம் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

பருத்தித்துறை, கிளிநொச்சி பரிவர்த்தனை நிலையங்களினூடாகவே இந்த 500 புதிய இணைப்புக்களும் வழங்கப்படவுள்ளமை குறிபபிடத்தக்கது. (க-7)

# கல்விமான்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அரசின் பொறுப்பாகும்

(கொழும்பு)

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகளை வகுக்கும் கல்விமானகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது ஆட்சித்தரப்பின் பொறுப்பாகும் என்று அமைச்சர் கே.ரி.லால் காந் தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையை மேற்கொள்ளும் நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சங்க பிரமுகர்களின் கருத்துக்களையும் கேட்டறியவேண்டும எனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கருத்துத தெரிவித்த அமைச்சர், பொதுமக்களும் தொழிலாளர்களும் நிராகரிதததனாலேயே இதுவரை அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய கொளகைகள் தோல்வியடைய நேர்ந்தன என்றார்.

கொழும்பில் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கில் சுகாதார போக்குவரத்து மற்றும் எரிபொருள் துறைகளைச் சார்ந்த கல்விமான்கள் பலரும கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-7,9)

# 'குருசெத' விசேட கடன்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு மக்கள் வங்கியினால் வழங்கப்படுகின்ற "குருசெத" விசேட கடன் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை ஜனநாயக ஆசிரியர் சஙகத்தின் தலைவர் ஏ.பி.கமால்தீன தலைமையில் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் யூ.எல.நியாஸிடம் கையளிக்கப்பட்டுள்ளதோடு அம்பாறை அரசாங்க அதிபர் மற்றும் மக்கள் வங்கியின் அம்பாறை மாவட்ட பிராந்திய முகாமையாளர்கள் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்கட்டியெழுப்பும் முயற்சியல் அரசாங்கம் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற "குருசெத" கடன் திடடத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கேட்டுள்ளதாக இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கமால்தீன் தெரிவித்தார். (க-9)

# பதிவு செய்ய நடவடிக்கை

(தென்மராட்சி)

கோப்பாய் மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவரும், பதினேழு இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கெதிராக 1983ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் பற்றிய பதிவுகளை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொள்ளவுள்ளது.

இடம்பெயர்ந்தோர் சங்கங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் அமுல் செய்யப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் மேற்படி முகாம்களில தங்கியுள்ள ஒவ்வொரு குடும்பத்தினதும் மனித உரிமை மீறல்கள் பற்றிய பதிவுகள் மிகவும் விபரமாக மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது. (7-16)

# மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண குழு நியமிப்பு

(புத்தளம்)

பத்தலங்குண்டு மீனவர்களால், கல்பிட்டி மீனவர்கள் தாக்கப்படுவதற்கும், தடுத்துவைப்பதற்கும் தீர்வுகாணும் வகையில் 15பேர் கொண்ட குழுவொன்றை கல்பிட்டி மீனவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கல்பிட்டியில நடைபெற்ற கூட்டமொன்றில் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கல்பிட்டி மீனவர்கள், பத்தலங்குண்டு மீனவர்களால் தாக்கப்பட்டு இயந்திர படகுகள் தடுத்துவைக்கப்பட்ட சம்பவத்தையடுத்து பதற்றநிலை தோன்றியிருந்தது.

தொடர்ந்தும் இந்தநிலை ஏற்படாமல் தவிர்க்கும் வகையில் கல்பிட்டி மீனவர்கள் பல தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

வர்த்தக சங்கம், மீனவசங்கம், பள்ளி பரிபாலனசபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கல்பிட்டி பிரதேச சபைக்குச் சொந்தமான பத்தலங்குண்டுவில், நீர்கொழும்பு பிரதேச மீனவர்களின் பலாத்கார குடியேற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதால், கல்பிட்டி மீனவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக இக்கூட்டததில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து தெரிவுசெய்யப்பட்ட இக்குழு, கடற்றொழில் நீரியலவளத்துறை அமைச்சர் சந்திரசேன விஜயசிங்காவை அடுத்த வாரம சந்தித்து, சில முடிவுகளை எடுக்கவுள்ளதாக சங்கத்தின் பேச்சாளர் எம்.தாரிக் தெரிவித்தார். (க-15)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக், ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப்செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவர் மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதானவிலையில் பெற்றுக்கொள்ள

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

T.P: 222 3226


# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

சுதேச வைத்திய அமைச்சின் கீழ் செயற்திட்ட முகாமைத்துவ, புள்ளி விபரவியல் அபிவிருத்தி, வைத்திய சாலை முகாமைத்துவம், விவசாய அபிவிருத்தி போன்றவற்றிற்கான 'உதவியாளர்' பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்பு நேர்முகத்தேர்வு மூலமானது. விண்ணப்பங்கள், செயலாளர், சுதேச வைத்திய அமைச்சு, 330, யூனியன்பிளேஸ், கொழும்பு-02 எனற முகவரிக்கு ஏப்ரல் 5ஆம் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும். (க-21)

# புதிய அதிபர் நியமனம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலய புற்றளை மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக எஸ்.அனந்தீஸ்வரன் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் வடமராட்சி வலய கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராகக் கடமையாற்றியவர்.

புற்றளை மகாவித்தியாலய அதிபர் திருமதி.எஸ்.இந்திரராஜா 30 வருட சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளதையடுத்தே இவர் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிபபிடத்தக்கது. (7-52)

# கணக்குப் பதிவியல் பயிற்சி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவு, அல்வாய் அம்பாள் வித்தயாலயத்தில் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்கான 'கணக்குப் பதிவியல்' பயிற்சிநெறியொன்றை ஆரம்பித்துளளது.

வித்தியாலய அதிபர் ஏ.தேவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியின் ஆரம்ப விழாவில் வடமராட்சி கல்வி வலய முறைசாராக கல்விப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.ஸ்ரீபதி பயிற்சி நெறியை அரம்பித்துவைத்தார்.

இப்பயிற்சி நெறியில் பாடசாலையை விட்டுவிலகிய 30 இளைஞர், யுவதிகள் கலந்துகொள்கின்றனர். (7-52)

# ஈராக் சிறையில் சுரங்கப் பாதை கைதிகள் தப்பும் முயற்சி முறியடிப்பு

(வோஷிங்டன்)

ஈராக்கில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப் பட்டுள்ள சிறையிலிருந்து தப் பிச் செல்வதற்காக 600 அடி நீள மான சுரங்கப்பாதை தோண்டப் பட்டுள்ளதை அமெரிக்க இராணு வம் கண்டுபிடித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இரா ணுவ அதிகாரிகள் தகவல் தெரி விக்கையில்,

கேம்ப் புக்கா சிறையின் மையப் பகுதியிலருந்து தோண் டப்பட்டுள்ள இச் சுரங்கம் மதிற் சுவருக்கு வெளியே முடிகிறது. கூடாரங்கள் அமைக்கப் பயன் படும் சிறிய மண்வெட்டியையும் நீர் எடுக்கப் பயன்படும் பிளாஸ் டிக் கேனையும் பயன்படுத்தி இச் சுரங்கம் தோண்டப்படடிருக்கலாம் என்று தெரிகிறது.

இச் சுரங்கம் 3.66 மீற்றர் முதல் 4.57 மீற்றர் ஆழமும் ஒரு மீற்றர் அகலமும் கொண்டது.

சுரங்கம் தொடங்கிய பகுதி தூசியால் மூடப்பட்டிருந்ததால் வெளியே தெரியவில்லை. ஆனால், சுரங்கத்தில் தோண்டி எடுத்த மண கழிவறைகளிலும் மற்ற இடங்க ளிலும் காணப்பட்டதால் அதிகா ரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சிறையில் பல்வேறு இடங்களையும் அதிகா ரிகள் சோதனை செய்தபோது சுரங்கம் தோண்டபபட்டிருப்பது தெரியவந்தது. கைதிகள் தப்பிச் செல்லும் முன் சுரங்கத்தை அதி காரிகள் கண்டுபிடித துவிட்டனர்.

பெரும் எண்ணிக்கையில் கைதிகள் தப்பிச் செல்ல இது வரை நடந்த முயற்சிகளிலேயே இதுதான் மிகப் பெரியது. இத ற்கு முன் சிறிய சுரங்கங்கள் தோண டப்பட்டது தொடக்கத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி 31இல் இச சிறையில் பெரும் கலவரம் நடந்த போது இராணுவத்தினர் நடத் திய துப்பாக்கிச் சூட்டில் 4 கைதி கள் இறந்தனர். 6போ காயமடை ந்தனர். ஈராக்கிய கைதிகளில மூன்றில் ஒரு பகுதியினர் இச் சிறையில் அடைக்கப்படடுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



டில்லியில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இல்லத்தில் ஹோலிப்பண்டிகை கொண்டாடப்பட்டது. அப்போது முன்னாள் துணை பிரதமர் அத்வானி, வாஜ்பாய்க்கு மலர் தூவி மகிழ்ச்சியை வெளிப்படுத்திய காட்சி.

# பிரிட்டன் முன்னாள் பிரதமர் 93 ஆவது வயதில் மரணம்

(இலண்டன்)

பிரிட்டனின் முன்னாள் தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரதம மந்திரி ஜேம்ஸ் கலகன் நேற்று முன்தினம் தனது 93ஆவது வய தில் காலமானார்.

அவரது மனைவி 11 நாட்க ளுக்கு முன்னர் தனது 67 ஆவது வயதில் காலமானது குறிப்பிடத் தக்கதாகும்.

பிரிட்டனில் தொழில் இயக் கத்தில் தீவிரமாக ஈடுபட்ட இவர், தொழில் கட்சியில் நீண்டகாலம் பணிபுரிந்தவரென தற்போதைய பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித் துள்ளார். (7)

# இங்கிலாந்தில் மோடியை கைது செய்ய திட்டம்

## பயணம் இரத்தானது தொடர்பாக புதிய தகவல்

(புதுடில்லி)

இங்கிலாந்தில் குஜராத் முதல் வர் நரேந்திர மோடியைக் கைது செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுள ளன. இதன் காரணமாகவே அவர் இங்கிலாந்து பயணத்தை இரத் துச் செய்துவிட்டார் என புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 25ஆம் திகதி இங்கி லாந்து செல்ல இருந்த குஜராத் முதல்வர் நரேந்திரமோடி கடைசி நேரத்தில் தனது பயணத்தை இரத் துச் செய்தார். இங்கிலாந்தில் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால், அவர் பயணத்தை தவிர்ப்பது நல்லது என்று மத்திய அரசு கூறிய யோசனையைத் தொட ர்ந்து மோடி தனது பயணத்தை இரத்துச செய்தார்.

இந்த நிலையில் மோடியின் பயணம் இரத்தானதற்கு புதிய காரணம் ஒன்று சொல்லப்படுகிறது.

குஜராத் கலவரத்தின் போது இங்கிலாந்தைச் சேர்ந்த தாவூத் கான் என்பவரின் இரு மகன்கள் ஆமதாபாத்தில் படுகொலை செய் யப்பட்டனர். அவர்கள் இருவரும இங்கிலாந்து குடியுரிமை பெற் றவர்கள். இந்தியாவில் உள்ள உறவினர்களைப் பார்க்கச் சென்ற போது கலவரத்தில் சிக்கி உயிரி ழந்தனர். தனது மகன்கள் படு கொலை செய்யப்பட்டது தொடர் பாக முதல்வர் மோடி மீது இங் கிலாந்து நீதிமன்றத்தில் வழக் குத் தொடர தாவூத்கான் முடிவு செய்திருந்தார். அதற்காக தனது வக்கீல் மூலம் மனுவும் தாக்கல் செய்ய ஏற்பாடு செய்துவந்தார்.

முஸ்லிம் ஒளி என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசிய தாவூத்கான், இதை வெளிப் படையாக அறிவித்தார்.

மோடி மீது இங்கிலாந்தில் எந்த வழக்கும் நிலுவையில இல்லை. ஆனால் தாவூத்கான் மகன்கள் படுகொலை செய்யப் பட்ட வழக்கில் மோடியை கைது செய்ய இங்கிலாந்து நீதிமன்றம் அனுமதி வழங்கிவிட்டால், மோடி இங்கிலாந்து பொலிஸாரால் கைது செய்யப்படும் சூழ்நிலை உரு வாகும். இதுபற்றி இங்கிலாந்து அரசு அதிகாரிகள் இந்திய தூதர கத்துக்குத் தெரியப்படுத்தினார் கள். அந்தத் தகவலை இந்திய தூதரகம் இந்திய அரசுக்கு தெரி வித்து அதன் காரணமாகவே மோடியின் பயணம் இரத்துச் செய் யப்படடதாகக் கூறப்படுகிறது.

இங்கிலாந்தில் மோடி கைது செய்யப்பட்டால் இந்திய - இங்கி லாந்து உறவில் சிக்கல் ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தால் மோடியி டம இந்தத் தகவலை மத்திய அரசு தெரிவித்து பயணத்தை 'இரத் துச் செய்ய வைத்ததாகத் தெரிய வருகிறது. வெளிநாட்டு அரசுத் தலைவரை இங்கிலாந்தில் கைது செய்த முன் உதாரணம் உண்டு.

1988ஆம் ஆண்டு சிலி சர் வாதிகாரி லண்டன் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபோது லண்டன் நீதிமன்றம் ஒன்று அவ ரைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பித்தது. கைது நடவடிக்கை யும் மேற்கொள்ளப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (7)

# லெபனானின் அமைதியற்ற நிலை சிரியாவைச் சீர்குலைக்கும்

## அமெரிக்கா கவலை

(சிரியா)

லெபனானில் காணப்படும் அமைதியற்ற நிலை சிரியாவின் ஸ்திரத்தன்மையை சீர்குலைத்து விடுமென அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

இதன்காரணமாக அது சிரியா எதிர்க்கட்சியுடன் தொடர்புகளை அதிகரித்து வருவதாக வோஷிங் டன் போஸ்ற் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இப்பத்திரிகைக்கு அமெரிக் காவின் வெளிநாட்டு அமைச்சா கொண்டலிசா ரைஸ் அளித்துள்ள பேட்டி ஒன்றில்,

சிரியாவிலும் லெபனானிலும் நடைபெறும் சம்பவங்கள் குறி த்து புஷ் நிர்வாகம் பல்வேறு தரப் பினருடனும் ஆலோசனை நடா த்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

திடீர் அரசியல் மாற்றங்கள் ஏற்படும்போது அதற்கேற்றபடி நட க்க அமெரிக்க அரசாங்கம் தயா ராகி வருவதாக அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இராஜதந்திர, இராணுவ தேசியப் பாதுகாப்பு அதிகாரிக ளும் ஏனைய நிர்வாக அதிகாரிக ளும் கடந்தமாதம் சிரியாவில் வாழும் அமெரிக்கர்கள் பலரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத் தியதாக சிரேஷ்ட இராஜாங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சிரிய ஜனாதிபதி பஷால் அல் ஆஷாத்தின் அரசாங்கத்தை பதவியிலிருந்து கவிழ்க்கும் முயற் சிகளை ஒருங்கிணைக்கும் ஒரு நடவடிக்கையே இந்த சந்திப்பு என வெளியான கருத்துக்களுக்கு அமெரிக்க அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (7)

# தினகரன் - மெடிமிக்ஸ் சினிமா விருது சாதனையாளர்களாக நாகேஷ் - வாலி

(சென்னை)

தினகரன் - மெடிமிக்ஸ் ஆகி யவற்றின் 2004ஆம் ஆண்டுக்கான சினிமா விருதுகள் அறிவிக்கப்பட் டுள்ளன. சிறந்த நடிகராக விஜ யும், நடிகையாக ஜோதிகாவும் விருது பெறுகின்றனர். நாகேஷ், வாலி ஆகியோருக்குச் சாதனை யாளர் விருது அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் திரையுலகின் வளர்ச் சியிலும, நடிகர், நடிகைகள், தயா ரிப்பாளர்கள், தொழில்நுட்ப கலை ஞர்களின் வளர்ச்சியிலும் அக் கறைகொண்டு, தினகரன் நாளி தழ் தனது அரிய சேவையையாற்றி வருவதுடன், திரையுலக கலைஞர் களை கௌரவிக்கும் வகையில ஒவ்வொரு ஆண்டும் சிறந்த படம், நடிகர், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்களுக்கு மெடிமிக்ஸ தின கரன் விருது வழங்கப்பட்டு வரு கிறது.

9ஆவது ஆண்டு மெடிமிக்ஸ் தினகரன் விருது வழங்கும் விழா எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி சென்னை ராயப்பேட்டையில் உள்ள வெஸ்லி பள்ளி மைதானத் தில் நடைபெறவுள்ளது. விருது பெறும் கலைஞர்களை தினகரன வாசகர்களே தேர்ந்தெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2004ஆம் ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்ட விருதுபெறும் கலைஞர்கள் விவரம் வருமாறு,

சிறந்த படம் - ஆட்டோகிராப் (ட்ரீம் தியேட்டர்ஸ்), சிறந்த நடி கர் - விஜய் (படம் - கில்லி) சிறந்த நடிகை- ஜோதிகா (பேரழகன்), சிறந்த இயக்குனர் - சேரன் (படம் ஆட்டோகிராப்) சிறந்த இசையமைப பாளர் - யுவன் சங்கர்ராஜா (படம - மன்மதன்) சிறந்த பாடகர் கார்த் திச் (படம் - 7ஜி ரெயின்போ காலனி), சிறந்த பாடகி - சித்ரா (படம் ஆடடோகிராப்), சிறந்த பாட லாசிரியர் - பா.விஜய் (படம் ஆட் டோ கிராப்), சிறநத ஒளிப்பதி வாளர்- எஸ் டி.விஜய் மில்டன் (படம் - காதல்), சிறந்த புதுமுக நடிகர் - ரவிகிருஷ்ணா (படம்7 ஜி ரெயின்போ காலனி), சிறந்த புதுமுக நடிகை சந் தியா (படம் காதல்), சிறந்த நகைச்சுவை நடிகா வடிவேல் (படம் - கிரி, ஏய்) .சிறந்த குணசித்திர நடிகர் விஜயன் (படம் - 7ஜி ரெயி ன்போ காலனி), சிற ந்த குணசித்திர நடிகை தேவயானி (படம் - நியூ) சிறந்த வில்லன் நடிகர் பிர காஷ்ராஜ் (படம் கில்லி), சிறந்த கதா சிரியர்- சிலம்பரசன் (படம் - மன்மதன்)



சிறந்த புதுமுக இயக்குனர் கே.ராதா மோகன் (படம் - அழகிய தீயே) சிறந்த வசனகர்த்தா - செல்வராக வன் (படம் - 7ஜி ரெயின்போ காலனி), சிறந்த நடன இயக்குனர் ராஜுசுந்தரம் (படம் - கில்லி), சிறந்த சண்டை பயிற்சியாளர் - கனல் கண்ணன் (படம் - எம்குமரன் சன் ஆப் மகாலட்சுமி), சிற ந்த கலை இயக்குனர் - ராஜீவன் (படம் மதுர), சிறந்த குழந்தை நட்சத்திரம் அருண்குமார் (படம் - காதல்), சிறந்த கலைப்படம்- காமராஜ் (ரமணா- கம்யூனிகே ஷன்ஸ

இம்முறை ஆட்டோகிராப் பட மும் 7ஜி ரெயின்போ காலனி படமும் தலா 4 விருதுகளையும் காதல், கில்லி ஆகியவை தலா 3 விருதுகளையும் மன்மதன் படம 2 விருதுகளையும் பெறுகின்றன.

மேலும் தமிழ் திரையுல கில் தங்களது தன்னலமற்ற சேவை யால் திரையுலகுக்குப் பெரும் புகழ் ஈட்டித் தந்த கலைஞர்களுக்கு சாதனையாளர் விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை நடிகர் திலகம் சிவாஜி, இயக்குனர் இமயம் கே.பாலசந் த், தயாரிப்பாளர் பஞ்சு அருணாச் சலம், மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன், இசைஞானி இளை யராஜா, பாடகி எஸ்ஜானகி, ஆச்சி மனோரமா, இயக்குனர் ஸ்ரீதர், காதல் மன்னன் ஜெமினிகணே சன், அபிநய சரஸ்வதி சரோஜா தேவி, நடிகர் எம்.என்.நம்பியார், இயக்குனர் கே.எஸ்.கோபால கிரு ஷ்ணன் ஆகியோர் சாதனையாளர் விருதினை பெற்றிருக்கிறார்கள். இம்முறை சாதனையாளர் விருது நகைச்சுவை சக்கரவர்த்தி நாகேஸ், இளமைக்கவிஞர் வாலி ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

விருது பெறும் கலைஞர்கள் அனைவருக்கும் தங்கப்பதக்கம் மெடிமிக்ஸ் தினகரன் விருதும் வழங கப்படவுள்ளன. கண்கவர் விழா வாக நடக்கவுள்ள இவ்விழாவில் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், முன்னணி நடிகர், நடிகைகள் கலந்துகொள்வர்.

நடிகர், நடிகைகள் பங்கு பெறும் கலைநிகழ்ச்சியும் இடம் பெறவுள்ள இவ்விழாவை ஆர்.எம். கே.வி இணைந்து வழங்குகிறது. (7)

# 130 தீவிரவாதிகள் பொலிஸாரிடம் சிக்கினர்

ஈராக்கில் 130 தீவிரவாதிகளை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

ஈராக் நாட்டின் கர்பாலாநகரில் நேற்றுமுன்தினம் ஈராக் பொலிஸாரும், அமெரிக்க படையினரும் இணைந்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். இதில் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 131 பேர் பிடிபட்டனர். அந்தப் பகுதியில் இருந்து ஏராளமான ஏவுகணை கள், வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டன.

பிடிபட்ட தீவிரவாதிகள் புனித நகரான கர்பாலா மீது மிகப் பெரிய தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு இருந்ததாகக் கூறப்படு கிறது. இதுகுறித்து ஈராக் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)



இந்தியாவில் தென் மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் தற்போதே அதிகமாகவுள்ளது. இந்நிலையில் தண்ணீர் பற்றாக்குறையும் பெரும் பிரச்சினையாகும் நிலை உள்ளது. அங்கு நீர்நிலை ஒன்று வறண்டு கிடக்கும் காட்சி.

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 20



### அத்தியாயம் VIII

உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் அதற்கான காரணங்களுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதுடன் சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடெதுவும் அரசியலமைப்புக்கு ஒவ்வாததாயுள்ளதா என்பதையும் தெரிவிக்கவேண்டும். உயர்நீதிமன்றம் ஒவ்வாத தன்மைகளைக் குறித்துரைக்கின்ற வேளையில் அத் தகைய ஒவ்வாததன்மையை நீக்குவதற்கான முறை யையும் விதித்துரைக்கலாம். உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் பேரில் அது பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவேண்டுமென்பதுடன் அத்தகைய அறிவிப்பின் மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படவும் கூடாது.

பின்வரும் சட்டமூலங்களில் பொருத்தமான திருத்தங்களைக் கைக்கொள்வதன் மூலம் ஒவ்வாததன்மைகளை நீக்கலாமென உயர்நீதிமன்றம் விதந்துரைத்தது.

1. 1978 இன் 9 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு (திருத்தச்)சட்டம்
2. அத்தியாவசிய பகிரங்க சேவைகள் சட்டமூலம் 1979
3. 1980இன் 35 ஆம் இலக்க அபிவிருத்திச் சபைகள் சட்டம்
4. 1980இன் 10ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்
5. 1983இன் 29ஆம் இலக்க அரச காணிக்ள் (உடமை மீட்புச் )சட்டம்
6. 1985இன் 47ஆம் இலக்க ஒதுக் கீட்டுச் சட்டம்
7. 1988 இன் 78 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துல் (திருத்தச்)சட்டம்.

ஏதேனும் சட்டமூலத்தின் ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு ஒவ்வாதனவென்று நீதிமன்றம் தீர்மானிக்கின்ற போது அச்சட்டமூலம் அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பான உறப்புரை 82 (1) இன் அல்லது (2)இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும், அத்தகைய சட்டமூலம் பாராளுமன்றத்தில் விசேட 2/3 பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமா என்பதையும் அல் லது அத்தகைய சட்டமூலம் பாராளுமன்றத்தில் விசேட 2/3 பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு மக்கள் தீர்ப்புக்கான வாக்கெடுப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படவும் வேண்டுமா என்பதையும் நீதிமன்றம் கூற வேண்டும். அரசியலமைப்புக்கான மூன்றாவது, ஐந்தாவது, பத்தாவது, பதின்மூன்றாவது, பதின்நான்காவது திருத்தங்கள் 2/3 பெரும்பான்மை மூலம் நிறை வேற்றப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. (முதலாவது பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடித்ததான) அரசியலமைப்புக்கான நான்காவது திருத்தம் 2/3 பெரும்பான்மையுடனும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்துடனும் நிறைவேற்றப்பட வேண்டு மெனவும் அது தீர்மானித்தது.

வாக்குரிமையும் தேர்தல்களும் பற்றிய அத்தியாயத்தை நீக்குதலும் திருத்துதலும் தொடர்பான, அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் அது 2/3 பெரும்பான்மை மூலம் நிறைவேற் றப்பட வேண்டுமென்றும் ஆயின் மக்கள் தீர்ப்பொன்று அவசியமற்றதென்றும் உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. அஞ்சல் கூட்டுத்தாபனச் சட்டமூலத்தில் அது பொருத்தமான முறையில் திருத்தப்பட்டாலன்றி அதனை நிறைவேற்றுவதற்கு 2/3 பெரும்பான்மை தேவையென உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. இச்சட்டமூலம் பாராளுமன் றத்தில் நிறைவேற்றப்படவில்லை. 1999 இன் சம வாய்ப்புக்கள் சட்டமூலமும் உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபிக் கப்பட்டது. எனினும் அது மீளப்பெறப்படுமென அமைச்சர் உறுதியளித்ததனால் அது தொடரப்படவில்லை. எனவே நீதிமன்றம் சட்டமூலத்தின் பரிசீலனையைத் தொடரவில்லை.

உயர் நீதிமன்றம் சட்டமூலமொன்றின் ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு ஒவ்வாதனவென்று தீர்மானித்து ஒவ்வாத தன்மையை நீக்வதற்கான முறைகளை விதித்துரைக்கின்றபோது, சட்டமூலத்தை நிறைவேற்றுகையில் உயர்நீதிமன்றத்தால் விதந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் சட்டமூலத்தில் முறையாகச் சேர்த்துக் கொள்ளப்படு தலை உறுதிப்படுத்த வேண்டியது பாராளுமன்றத்தின் கடமை.

*அவசரச் சட்டமூலங்கள்*

அவசரச் சட்டமூலங்களை நிறைவேற்றுதல் தொடர்பான அரசியலமைப்புச் சார்ந்த ஏற்பாடுகள் 122 ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒரு சட்டமூலம் தேசிய நலனுக்கு அவசரமானதென அமைச்சரவை தீர்மானிக்குமாயின், அத்தகைய ஒரு சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளிட்டு, அதன் இரண்டாம் மதிப் பீட்டுக்கு முன்னர் ஒரு வாரத்துக்கு அதனை ஒழுங்குப் புத்தகத்தில் வைத்திருக்க வேண்டுமென்ற அவசியத்தி லிருந்து அதற்கு விலக்களிக்கப்படலாமென்றும், உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் கிடைக்கப்பெற்றதும் உடன டியாக அது பாராளுமன்றத்தால் பரிசீலிக்கப்படலாமென்றும் அவ்வுறுப்புரை குறித்துரைக்கின்றது. ''அவசரம்'' தேசிய நலனுக்கானதாக இருக்க வேண்டுமாயினும் அது ஏன் அவசரமானதாகக் கருதப்படுகின்றதென்பதை அமைச்சரவை விளக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை.

2001 யு,னில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமூலம் குழப்ப மேற் படுத்துகின்ற நடைமுறை வரலாற்றைக் கொண்டிருந்தது . அது 2001.04.20 ஆந் தேதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2001 யு,னில் மீண்டும் ஓர் அவசரச் சட்டமூலமாக உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. வழமையான நடைமுறைப்படி 122 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலமொன்று ஜனாதிப தியால் உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றபோது எவரேனும் கருத்துரைகளை தெரிவிக்கக்கூடியதா கப் பொதுமக்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்படுவதில்லை. எனினும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட மூலத் தின் விடயத்தில் மூன்று மனுதாரர்கள் நீதிமன்றத்தால் விளங்கப்பட்டனர். அச் சட்டமூலத்தை அவசரமானதாகக் கருதவேண்டிய அவசியமில்லையென்பது மனுதாரர்களின் ஆட்சேபனையாயிருந்தது எனினும் அது நீதிமன்றம் முடிவு செய்வதற்கான ஒரு விடயமல்லவென்றும் ஒரு சட்டமூலம் அவசரமானதா இல்லையாவென்ற முடிவு முற்றுமுழுதாக அமைச்சரவையால் எடுக்கப்படவேண்டியதொன்றென்றும் நீதிமன்றம் தீர்மானித்தது. இச் சட்ட மூலம் சட்டமாக நிறைவேற்றப்படத் தவறியது.

அவசரச் சட்ட மூலமொன்று விசேட தீர்மானத்துக்காக உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்படும் போது நீதிமன்றம் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் அல்லது கூடியபட்சம் மூன்று நாட்களுக்குள் அதன் முடிவை வழங்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் தீர்மானம் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கப்படுவதுடன் அது பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படுவதைத் தொடர்ந்து உடனடியாக விவாதத்துக்கும் எடுத்துக் கொள்ளப்படலாம். 45 ஆம் நிலையியற் கட்டளைக்கான காப்பு வாசகம், அரசியலமைப்பின் 122ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அவசரச் சட்டமூலமொன்று அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் நியமிக்கும் ஒருநாளில் இரண்டாம் மதிப்பீட்டை எதிர்நோக்கி நிற்கவேண்டுமெனக் கூறுகின்றது. ஓர் அவசரச் சட்டமூலம் அது சமர்ப்பிக்கப்படுகின்ற அதேநாளில் ஏற்புடைய அலுவல் பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படலாம். பெரும்பாலும் அவ்வாறே செய்யப்படுகின்றது.

*இரண்டாம் மதிப்பீடு*

நிலையியற் கட்டளை 45 இன் கீழ் ஒரு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு அது சமர்ப்பிக்கப்பட்ட (முதலாம் மதிப்பீட்டுத்) தேதியிலிருந்து ஒரு வாரத்துக்கு முற்படாத ஒரு தேதியில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஒரு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடுதான் அவ்விடயம் பற்றி உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்ற பிரதான விவாதம். இரண்டாம் மதிப்பீடு சட்டமூலத்தின் நோக்கெல்லையையும் கோட்பாடுகளையும் பற்றிய அகல்விரிவான விவாதங்களைக் கொண்டாதாக இருக்கவேண்டும். இரண்டாம் மதிப்பீட்டின் மீதான விவாதம் பொதுவாக ஒரேநாளில் முடிந்துவிடக்கூடிய போதிலும் சில சந்தர்ப்பங்களில் அநேக நாட்களுக்கும் நீடிக்கலாம். சட்டமூலத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சட்டமூலத்தை அறிமுக ப்படுதத வேண்டுமென்பதுடன் இரண்டாம் மதிப்பீட்டின் முடிவில் விவாதத்தை முடித்து வைக்கவும் வேண்டும். இரண்டாம் மதிப்பீட்டின் போது திருத்தங்கள் முன்மொழியப்படலாம்.

(தொடரும்)

# மந்தகதியில் புனர்நிர்மாணம்; ஐரோ. பாராளுமன்றக் குழு கவலை

(கொழும்பு)

இலங்கையில் ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெறுவதாக ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நாடு திரும்பும் போது ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவின் தலைவர் நீனா கில் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான நிதியுதவிகள் கிடைத்துள்ள போதிலும் அத்தியாவசிய புனர்நிர்மாணம் தாமதம் அடைகின்றது.

இந்த நிலைமையினால் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு தொடர்ந்தும் நிவாரண உதவிகளோடு தங்கிருக்க வேணடிய நிலைமையும் தோன்றியுள்ளது.

புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்படுவதற்கு புலிகளும் அரசாங்கமும் இணைந்து கட்டமைப்பொன்றை ஆரம்பிப்பது முக்கியமானதாகும. அப்போது தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்ப முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# மும்மொழிகளிலும் தலைமை நீதிமன்ற நடவடிக்கைகள்

(கொழும்பு)

இலங்கையின் தலைமை நீதிமன்ற நடவடிக்கைகளில் நாட்டின் ஆட்சி மொழிகளான சிங்களம், தமிழ மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இருக்க வேண்டும் என்று நாடாளுமன்றம் வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் அரச கொறடாவும் வர்த்தகத்துறை அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இது தொடர்பான பிரச்சினையை நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். தலைமை நீதிமன்ற நடைமுறைகள் ஆங்கிலத்தில் இருப்பதால் மக்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மொழிச்சிக்கலை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சி கொறாடா மகிந்த சமரசிங்கவும் இப்பிரச்சினையில் ஐக்கிய தேசியக்கட்சி அரசுடன் ஒத்துழைப்பதாகவும், நீதிமன்ற நடைமுறைகளை மும்மொழிகளிலும் நடைமுறைப்படுத்தக் கோரும் தீர்மானததை நிறைவேற்ற வேண்டும் என்றும கேட்டுக்கொண்டார்.

இது குறித்து பதிலளித்த நாடாளுமன்ற அவைத் தலைவர் லொக்கு பண்டார இப்பிரச்சனையை நீதி அமைச்சான் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகக் கூறினார். (க)

# நம்பிக்கையில்லா தீர்மானம் ஐக்கிய தேசிய கட்சி முஸ்தீபு

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடிய பின்னர் அவ்வாரத்தில் ஒருநாள் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை, வாழ்க்கைச் செலவு அதிகாித்துச் செல்லுதல், பலவந்தமாக சர்வஜன வாக்கெடுப்பை மக்கள் மீது திணித்தல் ஆகிய விடயங்களை முன்வைத்தே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக நியோமல் பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-4)

# உதைபந்தாட்ட லீக் நிர்வாகசபை தெரிவு

(பொன்னாலை)

யாழ். உதைபந்தாட்ட லீக்குக்கு புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஈச்சமோட்டையில் அமைந்துள்ள லீக்கின் அலுவலகத்தில் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகத்தின் தலைவராக எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளையும், செயலாளராக மு. பிரான்ஸிஸும், உப செயலாளராக ரி. சுரேந்திரனும, பொருளாளராக ஏ.டன்ஸ்ரன, உப தலைவர்களாக கப்டன் டி.ஏ.எம். குணசிங்கம், எஸ்.ரி.கணநாதன், பி.ஜேக்கப்,கே.கணேசநாதன்,கே.தர்மரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (7-49)

**5 ஆம் தர மாணவர்களே!**

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் 5ஆம் தர புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள் உங்கள் வலம்புரியில் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் வாங்கத் தவறாதீர்கள்.

கல்விப்பிரிவு, வலம்புரி.

**O/L மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் மிகவிரைவில் பிரபல ஆசிரியர்கள் தயாரித்த மாதிரி வினாத்தாள்களின் பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

கல்விப்பிரிவு, வலம்புரி.

# பட்டினி போட்டு சாகடித்து பிணத்தை விற்கும் கும்பல்

# மனநல மருத்துவ மனையில் பயங்கரம்!



ஏழை நாடுகளில் ஒரு பிரிவினர் மக்களை சுரண்டி வளம் சேர்க்கின்றனர். அந்த வகையில் பிணத்தைக் கூட விட்டு வைக்காமல் பணம் பார்க்கும் கும்பல் ஒன்று கிர்கிஸ்தானில் ஆட்டம் போடுகிறது. அதுவும் அரசு மருத்துவமனையில் உள்ளவர்களே பிணத்தை உறவினர்களிடம் ஒப்படைக்காமல், அவர்களுக்குத் தெரியாமல் பிணங்களை விற்றுவருகின்றனர்.

ஆரம்பத்தில் ரஷ்யாவின் ஆதிக்கத்தில் இருந்ததுதான் கிர்கிஸ்தான். அதன்பின் சோவியத் குடியரசின் ஒரு பகுதியானது.

ஒன்றுபட்ட சோவியத் உடைந்து சிதறியபோது கிர்கிஸ்தான் தனி நாடானது. கடந்த 1991ஆம் ஆண்டு முதல் சுதந்திரக்காற்றை சுவாசித்தாலும், பல அட்டூழியங்கள் அங்கு தொடர்கின்றன.

கிர்கிஸ்தான் தலைநகர் பஷ்கேக்கில் உள்ளது அரசு மனநல மருத்துவமனை. இங்கு சேர்க்கப்பட்டுள்ளவர்கள் உயிருடன் தினம் தினம் சித்திரவதையை அனுபவித்து வருகின்றனர்.

சரியான உணவு கிடையாது. மருத்துவச் சிகிச்சை கிடையாது. மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த சித்திரவதைகள் தெரியாமல் இருககிறது என்பது இன்னும் பரிதாபம்.

குன்றியோர் புகலிடத்தில்தான் திமித்ரி இருந்தார். எங்கே போனது அவரது பிணம் என்று கடந்த ஐந்தாண்டுகளாகப் போராடிவருகிறார் அவருடைய தாய்.

திமித்ரியின் தாய் ரெய்சா ஒருநாள் மனநல மருத்துவமனைக்குச் சென்றார். தன் மகனைப் பார்க்கவேண்டும் என்று கூறினார். அதன்பின் நடந்த கொடுமை பற்றி ரெய்சா சொல்வது இதுதான்.

''மகன் பிணம் வேண்டும் என்றால் பணம் தரவேண்டும் என்று மருத்துவமனை ஊழியர்கள் முதலில் கூறினர். அதையும் கொடுத்துப் பார்த்தேன். அப்போதும் என் மகனுடைய உடல் கிடைக்கவில்லை. கேட்டால் 'உங்கள் மகனுடைய பிணத்தை மருத்துவ அகடமிக்கு அனுப்பிவிட்டோம்' என்றனர். அகடமிக்கு நான் சென்று விசாரித்தேன். அங்கு இன்னொரு அதிர்ச்சி எனக்குக் காத்திருந்தது.

என் மகனுடைய பிணம் தேவையில்லை என்று நானும் என் கணவரும் எழுதிக்கொடுத்திருப்பதாகப் போலி ஆவணங்களைக் காட்டினர். இதில் முககிய விஷயம் என்னவென்றால், என் மகன் இறிப்பதற்கு முன்பே என் கணவர் இறந்துவிட்டார். கடைசியில் மகனுடைய எலும்புகளைத் தருவதாக அகடமி அதிகாரிகள் உறுதியளித்தனர்.



என்ன நடக்கிறது என்பதை உணரக்கூடிய சக்தி கூட இல்லாமல் மனநல மருத்துவமனையில் நிறையப் பேர் உயிருடன் திரிந்துகொண்டிருக்கின்றனர்.

அங்கு சேர்க்கப்பட்டவர்தான திமித்ரி ஜெராசி மென்கோ. மருத்துவமனையில் இவர் பல நாட்கள் பட்டினிதான். அத்துடன அவரை அடிதது உதைதது சித்திரவதையும் செய்துள்ளனர். கடைசியில் கடந்த ஐந்தாண்டுக்கு முன் அவர் செத்தே போய்விட்டார். அப்போது அவருக்கு வயது 30. இறந்த பின்னும் அவருக்கு நல்ல கதி கிடைக்கவில்லை. அவருடைய பிணம் தாயிடம் ஒப்படைக்கப்படவல்லை என்பது கொடுமை.

தலைநகர் பஷ்கேக்கில் இருந்து 50கிலோமீற்றர் தொலைவில் உள்ளது ரேம்ஷேக். இங்குள்ள மனநலம்

இதுவரை எனக்கு அவனுடைய எலும்புகள் கூட கிடைக்கவில்லை. என் மகனுடைய பிணத்தை விற்றுவிட்டனர் என்று நினைக்கிறேன்".

இப்படித்தான் அந்த வயதான தாய் வேதனையுடன் கூறுகிறார். இது குறித்து கிர்கிஸ்தான் பொலிஸாரிடம் விஷயம் சொனனால், அவர்களும் பிணத்தை விற்பது குறித்து அறிந்துள்ளனர். கிர்கிஸ்தான் மனநல மருத்துவமனையில் இருந்து நூற்றுக்கணக்கான பிணங்கள் மருத்துவ அகடமிக்கு விற்கப்படடுள்ளன. அவற்றுள் ஒன்று திமித்ரியின் உடலாக இருக்கலாம் என்று பொலிஸாரும் சந்தேகப்படுகின்றனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்படும் மனநலம் குன்றியோர் விரைவில் இறந்துபோகவேண்டும எனற அளவில் அங்கு கொடுமைகள் நடப்பதாகப் புகார் எழுந்துள்ளது.

இறந்தவர்களின் உடல்களை அகடமிக்கு விற்று ஒரு கும்பல் பணம் பார்க்கிறது. அதேபோல் உடல்களை வாங்கும் அகடமியும ஜேர்மன் உடல்கூறு நிபுணருக்கு அதிக விலை வைத்து விற்றுவிடுகிறது.

குன்தர் வான் ஹாஜென்ஸ என்ற ஜேர்மன் உடல்கூறு நிபுணர் மனித உடல்களை விலைக்கு வாங்கி, அவற்றைப் படம் செயது கண்காட்சியாக நடத்துகிறார். அதன்மூலம் அவர் ஏராளமான பணத்தை அள்ளுகிறார். சர்வதேச பிணங்கள் கண்காட்சியை குன்தர் நடத்துவது குறித்து பயங்கர சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இப்படி மருத்துவ அகடமியில் இருந்து 500க்கும் மேற்பட்ட பிணங்களை குன்தர் வாஙகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குன்தருக்கு பிணங்கள் விற்றதை மருத்துவ அகடமியின் முன்னாள் தலைவர் வேளாரி கேபடோவ் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் கண்காட்சிக்காகப் பிணங்களை அவர் பயன்படுத்தவில்லை என்று அவர் மறுககிறார்.

உறவினர்களிடம் அனுமதி கிடைத்தபின் தான் சம்பந்தப்பட்ட பிணங்களை கண்காட்சியில் வைக்கிறார். மற்றவை ஆய்வுக்குப் பயன்படுத்தபபடுகின்றன என்று கேபடோவ் கூறுகிறார்.

திமித்ரியின் பிணத்தை விற்றது போலவே பலருடைய உடல்கள் உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்காமல், அவர்களுடைய ஒப்புதல் இல்லாமல் விற்கப்பட்டுள்ளன. மருத்துவ மனையில் அடிதது துன்புறுத்தியதில் பலர் இறந்துள்ளனர். சாகும்வரை அடித்திருப்பதும் தெரியவந்துள்ளது.

கிர்கிஸ்தானில் உள்ள மருத்துவ அகடமிக்கு குன்தர் ஏராளமான நிதி உதவிகள் அளித்துளளார். அகடமியின் ஊழியர்களுக்குச் சம்பளம் அளிக்கவும், நவீன கருவிகள் வாங்கவும் குன்தர் கோடிக்கணக்கில் பணம் தந்துள்ளார் என்று கேபடோவ் கூறுகிறார்.

எனினும் பிரச்சினை பெரிதான நிலையில் விசாரணை அதிகாரிகள் திடீரென அகடமியில சோதனை நடத்தினர். அப்போது அங்கிருந்த 120 பெரிய கன்டெய்னர்களை திறந்து பார்த்தபோது அதில் ஏராளமான பிணங்கள் சேகரிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் பிணங்கள் ஜேர்மனிக்கு அனுப்பத் தயாராக இருநததும் தெரிந்தது. கடந்த 1997ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை நிறையப் பேர் இறந்துள்ளனர். அவர்கலில் பலர் ஒட்டுமொத்தமாகப புதைக்கப்பட்டுள்ளனர். பலருடைய பிணங்கள் தலைநகர் பஷ்கேக் ஆய்வுகூடத்துக்குச் சென்றுள்ளன. அதன்பின் பிணங்கள என்ன ஆயின என்பது தொ' யாது என்று புள்ளிவிபரம் தருகின்றனர்.

கிர்கிஸ்தான் மனநல மருத்துவமனைகள் நிலை மிகவும் மோசமாக இருப்பதை அடுத்து அரசு தற்போது விழித்துக் கொண்டுள்ளது. கடும் கண்காணிப்புகள் போடப்பட்டுள்ளன.

**இதைவிடக் கொடுமை...**

கிர்கிஸ்தான் மனநல மருத்துவமனையில் 450க்கும் மேற்பட்ட நோயாளிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, மருந்துகள் போதிய அளவில் இல்லை. உயிருக்குத் தினம் தினம் போராடிக்கொண்டிருக்கின்றனர். அரிசி உணவு மிக மிகக் குறைவு. காய்கறிகள், பழங்கள் எதுவும் இல்லை. மாதத்துக்கு ஒருமுறை எப்போதாவது அதிஷ்டவசமாக அவர்களுக்கு மாமிசம் வழங்கப்படுகிறது.

சரியான சத்துணவு இல்லாததால், நோயாளிகள் இறநது விடுவது அதிகரித்து வருகிறது. மருத்துவமனையில் சுடுதண்ணீர் கிடையாது. வெளியில் கடும் குளிர்நிலவும் போது கூட நோயாளிகளைப் பராமரிக்க எந்த வசதியும இல்லை. வார்டுகளில் அளவுக்கு அதிகமான நோயாளிகள் இடவசதியின்றி அவதிப்படுகின்றனர். இரும்புக் கட்டிலில் பலமணி நேரம் இருக்கும் சூழ்நிலைதான்.

கழிவறைகள் இல்லாத வார்டுகளும் உள்ளன. பிளாஸ்டிக போத்தல்களைக் கொடுத்து அதில்தான் இயற்கை உபாதைகளைக் கழிக்கவேண்டும். மனநலம் பாதித்தவர்கள் எப்படி அதைச் செய்யமுடியும் என்பது பற்ற' யாரும கவலைப் படவில்லை. சீக்கிரம் செத்தால விற்று விடலாம் என்ற எண்ணம. பதது நாட்களுக்கு ஒருமுறை தான் அரைகுறை குளியலுக்குத் தண்ணீர் தருகின்றனர்.

மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் பலருக்கு லேசான பாதிப்புதான் இருக்கும். சரியான சிகிச்சை, பராமரிப்பு, ஊட்டச்சத்து கிடைத்தால் அவர்களும் நல்ல மனிதர்களாக சுதந்திர உலகைப் பார்ப்பார்கள். அதற்கு வாய்ப்பே அளிக்கப்படுவதில்லை என்பது மிக மிகக் கொடுமை.

இவ்வளவு கொடுமைகளையும் தாண்டி பலர் 10 ஆண்டுகளுக்கு மேல் கிர்கிஸ்தான் மருத்துமனையில் இருந்து வருகின்றனர்.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்துமா என்று பொதுநலம் விரும்பும் பலரும் கிர்கிஸ்தானில் ஏக்கத்துடன் கேட்கின்றனர்.

(து)

## சந்திப்பு

(கிளிநொச்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்டத்திற்கான புதிதாகப் பொறுப்பேற்ற வதிவிடப் பிரதிநிதியான மார்காரெஸ், வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தியுடன் கடந்த வியாழக்கிழமை அறிமுகரீதியான சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இச்சந்திப்பின் போது வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள், சமூக நல்லிணக்கச் செயற்பாடுகள், வவுனியா மாவட்ட மக்களின் அத்தியாவசியத் தேவைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திட்டங்களினால் மக்களுக்குக் கிடைத்த பயன்பாடுகள் பற்றிக் கலந்துரையாடியதுடன் அவை தொடர்பான விளக்கங்களையும் கேட்டறிந்து கொண்டார். (க)

# தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்தவர்கள் உதவ பேரார்வம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மீள் புனரமைப்புப் பணிகளுக்கு உதவவேண்டும் என்ற பேரார்வம் பிரிட்டன், கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புகலிடம் பெற்றிருக்கும் தென்மராட்சியைச் சேர்ந்தவர்களிடையே ஏற்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தென்மராட்சியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்த எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டுமென,

லண்டனில் இருந்து வருகை தந்திருந்த பொறியியலாளர் வேலுப்பிள்ளை சிவபாத சுந்தரம் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பங்கு கொணடு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி சங்கத்தின் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் தென்மராட்சப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், யாழ்.செயலக திட்டப்பணிப்பாளர் க.கேதீஸ்வரன், விடுதலைப்புலிகளின் தெனமராட்சி அரசியலதுறைப் பொறுப்பாளர் இ.ஈஸ்வரன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொணடனர்.

பொறியியலாளர் சிவபாத சுந்தரம் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

தெனமராட்சிப் பிரதேசத்தில் அவசியம செய்யப்பட வேண்டிய குறுகியகால மற்றும் நீண்ட கால செயற்திட்டங்கள் பற்றிய மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டும்.

மக்களின் தேவைகளைச் சரியானமுறையில் இனங்காணாது செயல்திட்டங்களை அமுல் படுத்துவதால் எத்தகைய பயனும் ஏற்படப்போவதில்லை.

இன்றைய காலகட்டத்தில் மேற்குலக நாடுகளில் திட்ட முகாமைத்துவக் கலாச்சாரம் நன்கு வளர்ச்சி பெற்றுவருகின்றது.

திட்டங்களை உரியவாறு அமுல்படுத்துவதன் மூலமே அதன் பயனாளிகள் நீண்டகால நன்மைகளைப் பெறமுடியும் என்பது இன்று அனுபவரீதியாக உணரப்படுகின்றது.

எனவே தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் மீள்கட்டுமானப் பணிகளிலும் ஈடுபடும் நாமும் மேற்குலக நாடுகளின் தரங்களுக்கு ஏற்ப எமது சிந்தனைகளையும் செயலபாடுகளையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

அததுடன், எம்மிடையே நிலவுகின்ற அறியாமை இயலாமை போதாமை போன்வற்றினை விலக்கிக்கொண்டு எமது பிரதேசத்தின் நீண்டகால அபிவிருததிக்கான இலக்குடன் செயல்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவின்போது பேராசிரியா க.கந்தசாமி தலைவராகவும், டாக்கடர் எஸ்.எஸ். அருளானந்தம், வ.சின்னப்பா ஆகியோா் உபதலைவா்களாகவும் இ.ஜெயக்குமார், மு.நாகேந்திர ராஜா ஆகியோா் இணைச் செயலாளர்களாகவும், பி.என்.சற்குண ராஜா பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 19பேர் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும். (7-16)

# வர்த்தகர்களிடம் இருந்து கப்பம் பெறும் சம்பவங்கள் அதிகரிப்பு

(புறக்கோட்டை)

புறக்கோட்டை வர்த்தகர்களிடமிருந்து கப்பம் பெறும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பாதாள உலககோஷ்டி தலைவர்களில் ஒருவரான பொட்ட நௌபருடன் தொடர்பான குழுவொன்று புறக்கோட்டையில் வர்த்தகர்களைப் பயமுறுத்தி கப்பம பெற்று வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக மெனிங் சந்தையிலும் தனியார் பஸ் நிறுத்தும் நிலையத்திலும் அதன் சுற்றாடல்களிலும் இத்தகைய சமபவங்கள் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது, (க-7)

# 1.4 மில்லியன் டொலர் பெறுமதியில் அம்பாந்தோட்டையில் வீடமைப்பு

1.4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில், அம்பாந்தோட்டையில் உருவாக்கப்படும புதிய வீடமைப்புத் திட்டத்திற்கு அத்திவாரக்கல் நாட்டும் விழா கடந்தவார இறுதியில் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம அதிதியாகவும், பரதமா மஹிந்த ராஜபக்ஷ சிறப்பு அதிதியாகவும் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள்.

சர்வதேச நிதியுதவியுடன், அம்பாந்தோட்டையிலுள்ள ஜயவத்த பகுதியில இந்தப் பாரிய வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

குழந்தைகள், தாய்மார், குடும்பத்திற்கு ஏதுவான சுகாதார மற்றும் வைத்திய வசதிகள் அனைத்தும் கவனத்திலெடுக்கப்பட்டு, சிறப்பாக இந்த வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வருடம நவம்பர் மாதத்தில் இவ்வீடுகள் பாவனைக்கு வழங்கப்படும் என்றும் இதன் பொறுப்பாளர் மிரேனா எவோரா தெரிவித்துள்ளார். (க)

# வசதிகளற்ற நிலையில் மெலிஞ்சிமுனை கிராமம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையின் பின தங்கிய மாவட்டமான மெலிஞ்சி முனையில் போக்குவரத்து சேவை இல்லாத காரணத்தால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் பலவருட காலமாக மின்வசதி இல்லாததால் இப்பகுதி எப்பொழுதும் இரவு நேரங்களில் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன.

தற்பொழுது கடும் வரட்சி நிலவுவதால் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

அத்துடன் கண்நோய், பொகளிப்பான், கூவக்கட்டு முதலிய வெப்ப நோய்களும் பரவியுள்ளன.

இவ்வளவு கஷ்ட நிலையில் தாங்கள் வாழ்ந்துவந்த போதிலும் இதுவரை ஒரு அதிகாரி கூட அங்குவந்து தங்கள் நிலையை அவதானிக்கவில்லையென இங்குள்ள கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் இவர்கள் இடம்பெயர்ந்து கரம்பனில் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (து)

# சாதாரணதர பரீட்சை முடிவுகள் ஏப்ரல் முற்பகுதியில் வெளியாகும்

கடநத டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடிவுகளை ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வெளியிடுவதற்குப் பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அனைத்துப் பாடசாலைகளினது அதிபர்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிஸிங்ஹ தெரிவித்தார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை எதிர்வரும் வாரத்திற்குள் தபாலில் அனுப்புவதற்கு திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. (க)

# மத்திய போக்குவரத்துச் சபை ஜூலை மாதத்திற்குமுன் ஸ்தாபிதம்

(கொழும்பு)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையை எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் ஸ்தாபிக்க உத்தேசித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த அடிப்படையில் மத்திய போக்குவரத்துச் சபையை ஸ்தாபிப்பது தொடாபான சட்டமூலம் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டதும் கொத்தணி பஸ் நிறுவனங்கள் யாவும் மூடப்படும். இலங்கை போக்குவரத்துச் சபையை ஸ்தாபிக்கும் அதேவேளை அரச போக்குவரத்துச் சபையில் பணிபுரியும் ஊழியர்கள் சுயவிருப்பில் விலகிக்கொள்ள விஷேட திட்டமொன்று அமுலாக்கப்படுமெனவும் போக்குவரத்து அமைச்சர் மேலும் தெரிவித்தார். (7)



25.03.2005 சுவீடனில் நடைபெற்ற சுதந்திர தாகம் நிகழ்வின் சில காட்சிகள்.

# சமாதானப் பேச்சுவார்த்தையை உடடியாக ஆரம்பிக்க வாய்ப்பில்லை

## அரசு தெரிவித்ததாக இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாகத் தொடங்கும் வாய்ப்பு இல்லையென இலங்கை அரசு தெரிவித்துள்ளதாக இணையத் தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் சுனாமி நிவாரண உதவிகளை விநியோகிப்பதில் இரு தரப்பும் இணைந்து செயற்படுவதில் உடன்பாடு காண்பது சாத்தியமென வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமா் தெரிவித்ததாகவும் அநத இணையததளம் வெளியிட்டுள்ள தகவலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கையில் கடந்த 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து அரசுக்கும் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை தொடராமல் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வெளிநாட்டு ஊடகவியலாளரிடையே கருத்துத் தெரிவித்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்,

அமைதி முயற்சிகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருந்தாலும் கூட சுனாமி நிவாரணத்திற்கான வெளிநாட்டு நிதியுதவிகளை பகிர்வதில் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும், அவற்றில் பினனடைவு இல்லையெனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மட்டுமே இந்த உடன்படிக்கை என சுட்டிககாட்டிய கதிர்காமா, இது அரசியல் ரீதியான அமைப்பு இல்லையெனவும அதற்கு சட்ட, அரசியல் அதிகாரங்கள் எதுவும் வழங்கப்படமாட்டதெனவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேநேரம் விடுதலைப்புலிகளுடன இணைந்து செயற்படுவதற்கு ஆளும் கூட்டணியின் முக்கிய கட்சியான ஜே.வி.பி. எதிர்புத் தெரிவித்துள்ளது.

இரு தரப்பினரிடையிலும் உடன்பாடு எட்டப்பட்டால் ஜே.வி.பியின் நிலை என்னவாக இருக்குமென தனக்குத் தெரியாது எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுனாமி நிவாரணப் பணிகளில் இணைந்து செயற்படுவதற்கு விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் கதிர்காமர் அந்த ஊடகவியலாளர் மகாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

## "தூறல்" சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட இருக்கும் "தூறல்" மாதாந்த சஞ்சிகைக்கான தரமான ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

அறிவியல் தகவல்கள், தமிழ பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கக் கூடிய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் விளையாட்டு தகவல்கள் ஏனைய அருமையான புதுமையான தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆக்கங்களை வகுப்பு மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஊடாகவோ அல்லது தமிழ் மாணவா ஒன்றிய தலைமை செயலகத்தின் ஊடாகவோ ஒப்படைக்குமாறு தமிழ் மாணவர் ஒன்றிய தூறல் வெளியீட்டுப் பிரிவு கேட்டுள்ளது. (க)

# தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீரழிக்கின்றன

தனியார் கல்வி நிலையங்கள் மாணவரின் கல்வியை சீரழிக்கின்றன என்பதே எனது வாதமாகும்.

காரணம் கல்வி என்பது மாணவரின் கற்றல் செயற்பாடுகள் மிக வேகமாக விரிவாக்கம் பெற்றுள்ள இன்றைய காலத்தில் மாணவரின் சமூகம் சார்ந்த, பொருளியல் தேவை சார்ந்த விதத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மாற்றமடைகின்றன.

அந்த வகையில் நவீன கருத்துக்களை உள்வாங்கி, அவற்றை மாணவருக்கு உகந்த முறையில் புகட்டக் கூடிய தகுதியோ அல்லது வாய்ப்போ தனியார் கல்வி நிலையங்களுக்கு இல்லை என்பது குறிப்பிடக் கூடியதாகும்.

செய்முறை ரீதியில், ஆய்வு ரீதியில் விடயங்களை அணுகுகின்ற முறை, அவற்றை கற்பித்தல் உபகரணங்கள் மூலம் விளங்கப்படுத்துகின்ற தகமை அல்லது ஆற்றல் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்குக் கிடையாது.

கற்பித்தல் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

"ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடும் குதிரைகளுக்கு கொள்ளு வைப்பது போல" பல்கலைக்கழக தெரிவு என்ற ஒன்றை மட்டுமே நோக்காகக்

களின் வழிகாட்டல்களினூடாக நடைபெறுவதில்லை. இவை செயன்முறைக் கல்வி தனியார் கல்வி நிறுவனங்களினூடாக வழங்கப்படாமையைக் காட்டுகின்றன.

**தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? என்ற விவாத அரங்கிற்கு, சீரழிக்கின்றன எனத் தமது வாதங்களை முன்வைக்கின்றனர் நீர்வேலி க.கணேசராசா (நீர்வையூரான்) மற்றும் மானிப்பாய் நா. சிவநேசன் (அதிபர்) ஆகியோர்.**

கொண்டு தனியார் கல்வி நிலையங்கள் செயற்படுகின்றன. இலங்கையில் பல்கலைக்கழகங்களுக்கு மிகச் சிலரே தெரிவாகிறார்கள். தெரிவு செய்யப்படாத பெரும்பாலான மாணவர்களின் நிலை கேள்விக்குறியே. ஆனால் பாடசாலை

புதிய கல்விச் சீர்திருத்த சிந்தனைகளுக்கு மாறான கல்வியையே தனியார்கல்வி நிறுவனங்கள் வழங்குவதனால், தகவல் தொழில் நுட்ப யுகமான இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தப்பாடுடைய

டிக்கைகளுக்கோ உட்படுத்த வேண்டும். தனியார் கல்வி நிலையங்கள் இதை மேற்கொள்வதில்லை. இதனால் இவர்கள் கற்றல், கற்பித்தலில் புறக்கணிக்கப்படுவதால் சமூகப் பொருத்தப்பாடற்ற பிரஜைகளாக உருவாக வழியேற்படுகிறது.

வகுப்பறைகளில் ஆபத்து விளிம்பில் உள்ள கற்போரும் காணப்படுவர். உளவளர்ச்சியில் பின்னடைவு கொண்டோர், கற்றல் குறைபாடுடையோர், வறுமையின் கொடுமைக்குட்பட்டோர், புலன்களில குறைகளுடையோர், நடத்தைக் கோளாறுடையோர், பெண்ணிலை வேறுபாட்டால் ஒதுக்கப்படுவோர் ஆபத்து விளிம்பில் உள்ள கற்போராவர். இவர்களது குறைபாடுகளை இனங்கண்டு வகைப்படுத்த தனியார் கல்வி நிறுவனங்களால் முடிந்தாலும், அவர்களை ஆபத்து விளிம்பில் இருந்து காப்பாற்ற அவற்றால் முடியாது.

யின். தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர்களை கற்பித்தல்- கற்றல் சாதனங்கள் இன்றி கற்பனை உல

## வாதம் -5

கில் சஞ்சரிக்கவிட்டே கற்பித்தல் - கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வேதனைக்குரியது.

தனியார் கல்வி நிலையங்களில் அறநெறிக்கல்விக்கும் ஒழுக்கக் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. இவை சமய வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்படுவதில்லை. அங்கு நற்சிந்தனைகள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஒழுக்கம் சார் வழிகாட்டல்கள் இல்லை. இவை மாணவர்களின் ஆன்மீக வாழ்வுக்குத் தடையாக அமையும்.

நாட்டிற்குப் பொருத்தப்பாடுடைய நடத்தைக் கோலங்களைக் கொண்ட நல்ல விழுமியங்கள், மரபுகள், சம்பிரதாயங்கள், நியமங்களை மதிக்கும் பரம்பரை ஒன்று உருவாகாமைக்குத் தனியார் கல்வி நிலையங்கள் காரணமாக அமைகின்றன. ஆசிரியர்கள் கல்வியை வியாபாரப் பண்

பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் வெறுமனே பரீட்சைகளில் புள்ளிகளைப் பெற்று உடனடியாக ஆசிரியர்களாக வந்தவர்கள் அல்லது நியமனம் பெற்றவர்கள். இவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆற்றல் கிடையாது எனக் கூறுவது "வல்லார் கையில் புல்லும் ஆயுதம்"

**க.கணேசராசா**
**நீர்வேலி**

என்று கூறுவதற்கு ஒப்பாகும்.

ஒருவர் ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு முன்னர் தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் நியமனம் பெற்ற பின்னர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவகம் போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டு முழுமையான ஆற்றல் வாய்ந்த ஆசிரியர்களாக செயற்படுபவர்கள்.

ஆனால் தனியார் கல்வி நிலையங்களில் எந்தவிதமான பயிற்சியும் அற்ற பணம் ஒன்றையே நோக்காகக் கொண்ட ஆசிரியர்களே கல்வி கற்பிக்கிறார்கள். இவர்கள் தங்களது கவர்ச்சிகரமான உடைகள், விரசமான பேச்சு போன்றவற்றால் இளம் மாணவ உள்ளங்களை கவர்வதன் மூலம் தங்கள் வர்த்தகத் தொழிலை மேற்கொள்கின்ற யதார்த்த நிலையையும் காணலாம்.

ஆனால் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட முறையில் மாணவர்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மிக நுட்பமாக கற்பிக்கப்படுகின்றது. கணிப்பீடுகள், ஒப்படைகள், குழுச்செயற்பாடு, சுய ஆக்கம், கட்டுரைச் செயற்பாடு, களச்செயற்பாடு எனக் கற்பித்தல் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பல்கலைக்கழகம் புகுதல் தான் கல்வியின் குறிக்கோள் என்ற கொள்கைகள் வலுப்பெற்றுள்ள இக்காலத்தில் உயர் புள்ளி என்ற நோக்கை மாத்திரம் கொண்டு தனியார் கல்வி நிலையங்கள் செயலபட்டுவருகின்றன.

ஆனால் பாடசாலைகள் அப்படியல்ல. ஒவ்வொரு மாணவனும் சமுதாயத்துடன் இணையக் கூடிய வகையில், எதிர்காலத்தில் சுய முயற்சியில் முன்னேறக் கூடிய, சமுதாயத்திற்கு பயன்படக் கூடிய வகையில் தன்னைச் சூழ உள்ள வளங்களைப் பயன்படுத்தி தனது வாழ்வை மேம்படுத்தும் வகையில் மாணவனுக்கு கல்வியை வழங்குகின்றன.

ஆனால் தனியார் கல்வி நிலையங்களில் இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுவதற்கான வாய்ப்போ, வசதியோ இல்லை.

மேலும் பாடசாலைகளில் மாணவனின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப அவனுடைய உளம் சார்ந்த, தன்மைகளுக்கு ஏற்ப இலகுவான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி

கள் ஒவ்வொரு மாணவனும் சமூகத்திற்குப் பயன்படும் வகையில் அவனை சிறந்த சமூகப் பிரஜையாக உருவாக்குவதில் திட்டமிட்ட முறையில், கல்வி சார் நிபுணர்க

## விவாத அரங்கு -7

ளின் ஆலோசனைகளுக்கு அமைய செயற்படுகின்றன.

ஆகவே மாணவரின் கல்விச் செயற்பாடுகள் விரிவடைந்து செல்கின்ற இன்றைய காலகட்டத்தில் மாணவனுடைய கல்வியை தனியார் கல்வி நிலையங்கள் சீரழிக்கின்றன என்பதே உண்மையாகும் □

கல்வி வழங்கலினூடாக, இலாபத்தை உச்சப்படுத்தும் நோக்கில் உருவான கல்விக்கட்டமைப்புக்கள் தனியார்கல்வி நிறுவனங்கள் ஆகும். இவை இலாபத்திற்காகவே கல்விச்சேவையை வழங்குவதால், இவற்றின் நோக்கம் பொருளாதாரச் சிந்தனை கொண்டதாக அமைவது கண்கூடு.

தனியார் கல்வி நிறுவனங்களில் கல்விபோதிக்கும் ஆசிரியர்களில் பலர், பயிற்சி அற்றவர்களாகவும், ஆசிரியர் அல்லாத பிற தொழில்களைச் செய்பவர்களாகவும் இருப்பது அறியப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தம், பயிற்சி அற்ற ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளது. பயிற்சி அற்ற ஆசிரியர்கள் மாணவர்களின் உடல் சார்ந்த, உளம்சார்ந்த, மனவெழுச்சி சார்ந்த இயல்புகளை அறிந்து கொள்ள மாட்டார்கள். இதனால் மாணவர்களை நல்ல மனிதர்கள் ஆக்கக் கூடிய பொருத்தமான கல்வியை வழங்க முடியாதவர்களாகவே இவர்கள் இருப்பர்.

புதிய கல்விச் சீர்திருத்தமானது தேடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஆசிரியர் வழிகாட்டுபவராகவும், மாணவர்கள் அந்த வழியில் சென்று தேடிக் கற்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இருபத்தோராம் நூற்றாண்டிற்கான மாணவர் ஈடுபாடுகளாக ஒப்படைச் செயற்றிட்டம், செயற்பாட்டு வாதவிவாதம் -கருத்துத்திரட்டி முன்வைத்தல், சிந்தனையைக்கிளறல், காட்சிப்படுத்தல் போன்றவை காணப்படுகின்றன. கற்றல் சந்தர்ப்பங்களாக பிரச்சினை தீர்த்தல், கண்டறிதல், பரிசோதனை செய்துகாட்டல், விவகார ஆய்வு, கருத்தரங்கு, களப்பயணம், இலக்கிய உசாவுகை, சிறு ஆராய்ச்சி போன்றவை காணப்படுகின்றன.

இந்த வகையான மாணவர் ஈடுபாடுகளோ, கற்றல் சந்தர்ப்பங்களோ தனியார் கல்வி நிலையங்

பிரஜைகளை உருவாக்காது மாணவர் கல்வியச் சீரழிக்கின்றன.

புதிய கல்விச் சீர்திருத்தத்தினால் பாடமாக்கி எழுதும் முறை நீங்கி, விளங்கி அறிந்து எழுதும் முறை உருவாகியுள்ளது. மாண

வர்களின் அடைவுமட்டங்கள் பரீட்சைகளில் இருந்து தீர்மானிக்கும் நிலைமாறி தொடர் மதிப்பீடுகளிலிருந்தே தெரிந்து கொள்ளும் நிலை படிப்படியாக கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. இதற்கு நூலகப்பயன்பாடு இன்றியமையாதுள்ளது. தனியார் கல்வி நிலையங்கள் நூலகப் பயன்பாட்டை வழங்குவதில்லை. மாணவர்களின் ஓய்வுநேரத்தைத் தனியார் கல்வி நிலையங்கள் விழுங்கி விடுவதனால் நூல்களை வாசிப்பதையோ, நூலகங்களைப் பயன்படுத்தவோ முடியாத நிலை மாணவர்களுக்கு. இது மாணவர்களின் கல்வியைச் சீரழித்துச் சிதைத்துவிடுகிறது.

புதிய கல்விச் சீர்திருத்தப்படி பாடசாலைகளில் கணிப்பீடு இடம் பெறுகின்றது. இதில் பிள்ளை, பிள்ளையுடனேயே ஒப்பிடப்படுகின்றது. பிள்ளை, ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிடப்படுவது, கூடியளவு தவிர்க்கப்பட்டு வருகின்றது. ஆனால் தனியார் கல்வி நிலையங்கள் தொடர் மதிப்பீடுகளைப் பேணுவதில்லை. கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை. கல்வி சம்பந்தமான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்கத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு இயலாது. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் சீரழிய வழியேற்படுகிறது.

மாணவர்களில் சிலர் ஆளுமைக் குலைவிற்கு உட்பட்டிருக்கலாம். சகமாணவர்களின் கேலிகளைப் பொறுக்க முடியாது பழிவாங்க முனைதல், அசாதாரணமாகக் கோபப்படுதல், எநேரமும் சண்டைக்கு ஆயத்தமான நிலையில் இருத்தல், தனிமை உணர்வு மேலோங்கி இருத்தல், பொருத்தமற்ற ஆடைகளை அணிதல், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுதல் போன்றன ஆளுமைக் குலைவின் சிலபண்புகள்.

இவர்களைச் சீர்திய நடவடிக்கைகளுக்கோ, துணை வழங்கல் நடவ

பாடசாலை முடிந்து ஓய்வாக இருந்தால் மாணவர்களின் உடல், உளம் ஆரோக்கியம் பெறும். ஆனால் தனியார்கல்வி நிறுவனங்கள் மாணவர்களை ஓய்வாக இருக்கவிடுவதில்லை. உடல், உளம் பாதிக்கப்பட்ட மாணவர் பரம்பரை ஒன்று உருவாக தனியார் கல்வி நிறுவனங்கள் தற்போது காரணமாக அமைகின்றன.

கறபித்தல் - கற்றல் நுட்ப முறைகளாக விரிவுரைமுறை, கலந்துரையாடல் முறை, வினாவுதல் முறை, செய்து காட்டல் முறை, சிந்தனையைக் கிளறும் முறை, குழுமுறைக் கற்பித்தல், நுண்முறைக்கற்பித்தல் போல அமைத்துக்கற்றல், அணிமுறைக் கற்பித்தல், செய்திட்ட முறைக் கற்பித்தல், ஒப்படைகளைப் பயன்படுத்துதல் முதலியன காணப்படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட தனியார் கல்வி நிறுவன வகுப்பறைகளில் விரிவுரை முறையே பின்பற்றப்படுகின்றது. இது ஒரு வழித் தொடர்பு கற்றல் - கற்பித்தல் முறையாகும். தொடர்ந்தும் ஏட்டுக் கல்விமுறை இந்த மண்ணில் நின்று நிலைக்க தனியார் கல்வி நிறுவனங்களின் விரிவுரை முறை காரணமாக அமைகின்றது.

தனியார் கல்வி நிறுவனங்களில் பெரும்பாலும் கரும்பலகையே கற்பித்தல் - கற்றல் சாதனமாகப் பயன்படுகின்றது. கட்புல சாதனங்கள், செவிப்புல சாதனங்கள், கட்புலசெவிப்புலசாதனங்கள், மாதிரியுருக்கள், தன்வகைகள், செய்து காட்டல்கள், நிஜவாழ்க்கை அனுபவங்கள் போன்றவை இவ் வகை

**நா.சிவநேசன்**
**மானிப்பாய்**

டங்களாக்குவதனால், அவர்களுக்குரிய மரியாதை கிடைப்பதில்லை. உதாரணம்:- கொமஸ் வாத்தி வாறான். மாணவர்களைக் கவரும் நோக்கில் பாலியல் உள்ளிட்ட கீழ்த்தரமான நகைச்சுவைகளையும் தனியார் கல்வி நிலையங்களில் பயன்படுத்துவதனால் ஆசிரியர்களுக்கான மரியாதை இல்லாமற் போகின்றது.

பெரும்பாலான தனியார் கல்வி நிலையங்களில் மலசலகூடவசதிகளோ, குடிநீர்வசதிகளோ மாணவர்களுக்கு தேவையான அளவில் செய்து கொடுக்கப்படுவதில்லை. விளையாட்டு முற்றமில்லை. வசதியான, ஆரோக்கியமான இருக்கைகள் செய்து கொடுக்கப்படுவதில்லை. நிலங்கள் புழுதி நிலங்களாகவே உள்ளன. இதனால் பல்வேறு வகையான நோய்களுக்கு மாணவர்கள் ஆட்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுக் கல்வி நடவடிக்கைகள் சீரழிய வாய்ப்பேற்படும்.

பாடசாலை முடிந்ததும், தனியார்கல்வி நிலையங்களை நாடிச் செல்வதனால் இணைப்பாடவிதான செயற்பாடுகளையோ அதன் மூலம் வளர்த்தெடுக்கப்படும் பண்புகளையோ மாணவர்கள் மத்தியில் விதைக்க முடியாதுள்ளது. உதாரணம் :- விளையாட்டின் மூலம் வளர்க்கப்படும் வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்கும் தன்மை, தலைமைத்துவப் பண்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதன்படி நோக்குகின்றபோது, தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியைச் சீரழிக்கின்றனவே தவிர, எந்தவகையிலும் சீர்ப்படுத்தவில்லை என்பதே எனது வாதமாகும். □

## பாதிப்புற்றோருக்கு மேசை, கதிரைகள்

(தென்மராட்சி)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து எண்ணூற்றி 80 குடும்பங்களுக்கு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் தலா ஒரு பிளாஸ்ரிக் மேசையையும், நான்கு பிளாஸ்ரிக் கதிரைகளையும் வழங்கவுள்ளது.

இதற்கென மேற்படி ஒன்றியம் கொழும்பில் இருந்து பதினெட்டு லொறிகளில் மேற்படி பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

இதேசமயம், சுனாமியால் பாதிக்கப்பட்ட க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர வகுப்புக்களில் பயில்கின்ற 610 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் திட்டத்தில் இதுவரை 420 துவிச்சக்கரவண்டிகள் விநியோகிக்கப்பட்டுவிட்டன என ஒன்றியத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இ.பகீரதன் தெரிவித்துள்ளார். (க-16)

தாமின் புறுவது உலகின் புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் - குறள்

## வலம்புரி

## பேராயர் ஜெபநேசன் ஓர் அற்புதமானமனிதர்

தென்னிந்தியத் திருச்சபையின் அதிவணக்கத்திற்குரிய பேராயர் சு.ஜெபநேசன் அவர்கள் இன்றுடன் தனது பணியில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

பன்னிரண்டு ஆண்டுகள் தென்னிந்திய திருச்சபையின் பேராயராக இருந்து அவர் ஆற்றிய இறைபணிகள் போற்றுதற்குரியவை. இறைபணி என்பதற்கு அப்பால் அவரிடம் இருந்த சமூக நோக்கு- பன்முகப்பார்வை அவர் மீது தனித்துவமான அன்பை-மதிப்பை மக்களிடையே ஏற்படுத்தியது.

பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்கள் தென்னிந்திய திருச்சபையின் முதல்வராக இருந்தபோதிலும், அவர் எல்லா மதங்களையும் மதித்தவர். மதம் என்ற பேரால் அவர் எந்த மனிதனையும் நோக்கியவர் அல்ல. இயேசு பிரானின் போதனையை சிரமேல்கொண்டு அதற்கு அமைவாக நடந்துகாட்டியவர்.

ஏழை, பணக்காரன், படித்தவன், படியாதவன் என்ற பாகுபாடு பேராயர் ஜெபநேசனிடம் இம்மியும் இருக்கவில்லை. எல்லோருடைய இன்ப துன்பங்களிலும் கலந்து கொள்ளும் அவரின் உயர்ந்த பண்பு அனைவராலும் பாராட்டப்பட்டது.

எளிமையான வர்ழ்கை, ஆற்றுப்படுத்தும் ஆறுதல் வார்த்தை, வந்தாரை வரவேற்கும் உயரிய குணம் இவை அனைத்தையும் தனது அணிகலங்களாக கொண்ட பேராயர் ஜெபநேசன் அவர்கள் தாய்மொழியாகிய தமிழை தன் உயிரினும் மேலாக மதித்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பெரும் புலமை மிக்கஅவரின் மேடைப் பேச்சுகள் அற்புதமானவை.

பேராயர் உரையாற்றுகின்றார் எனில் அந்த உரையில் இலக்கியச் சுவை மிகுந்திருக்கும், நகைச்சுவை செறிந்திருக்கும், கவிச்சுவை பரந்திருக்கும். ஒட்டுமொத்தத்தில் அவரின் உரை கேட்போரை வசப்படுத்தும். அத்துணை நுட்பமாக உரையாற்றும் திறன் மிக்க பேராயர் அவர்கள் இந்து சமயத்தத்துவங்களை நன்கு அறிந்து வைத்திருந்தார்.

எந்த மதம் எதனைக்கூறினாலும் அதற்குள் தத்துவம் இருக்குமாயின் மனிதநேயம் இருக்குமாயின் அன்பும் அகிம்சையும் இருக்குமாயின் அதனை ஏற்றுக்கொண்டு மக்கள் மத்தியில் முன்வைக்கத் தவறாத பெருந்தகை அவர்.

யாழ்ப்பாணத்தில் அவரின் சமயப்பணி என்பதற்கு அப்பால் தமிழ்ப்பணி பற்றியநோக்கு தனித்துவமாக பார்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

யாழ்ப்பாண மண்ணில் இருந்த- இருக்கின்ற தமிழ் அறிஞர்களுடன் இணைந்து அவர் ஆற்றிய தமிழ்ப்பணி வரலாற்றில் பதியப்படவேண்டியவை.

சைவத்தையும் தமிழையும் பிரிக்கமுடியாது என்ற நோக்கில் தமிழ் அறிஞர்கள் பணியாற்றிய வேளையில் அதனை ஏற்றுக்கொண்டு பேராயர் ஜெபநேசன் அவர்கள் தமிழ்ப்பணி புரிந்தார் எனில் அவரின் ஒப்புமை எத்துணை உயர்வானது என்பதை நாம் உணர முடியும்.

தமிழையும், வரலாற்றையும் நன்கறிந்த பேராயர் அவர்களுக்கு பேரறிஞர் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையானது தமிழுக்கு கிடைத்த கௌரவமாகவே கருதப்படுகிறது. அந்த அற்புதமான மனிதரின் ஓய்வு காலம் சிறக்கட்டும். அவரின் ஆழ்ந்த அறிவும், அனுபவ ஞானமும் தமிழ்இனத்திற்கு மேன்மேலும் பயன் தரட்டும் .

# சுனாமியால் பாதிப்புற்றவர்களுக்கு இஸ்லாமிய நிவாரண அமைப்பு உதவி

(புத்தளம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு இஸ்லாமிய நிவாரண அமைப்பு சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது.

இங்கிலாந்தினை தலைமையகமாக கொண்ட முஸ்லிம் கரங்கள் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் ஏ.எம் ஹிலார் தலைமையில் சென்ற குழுவினர் இந்த நிவாரணப் பொருட்களைகையளித்துள்ளனர்.

குச்சவெளி,கிண்ணிய புடவைக் கட்டு, திருகோணமலை நகரங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இப் பொருட்கள விநிநோகிக்கப்பட்டன.

அதேவேள்ளை, சுனாமியால் வீடுகளை இழந்த விதவைகளுக்கு 100 வீடுகளை நிர்மாணித்து கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.மூன்றரை இலட்சம் ரூபா செலவில் தலா ஒவ்வொரு வீடும் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றன. ஏறாவூரில் முதற்கட்டமாக 5வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

அதேவேளை, அம்பாந்தோட்டையிலும் இவ்வாறு வீடமைப்பு பணிகள் நடைமுறைப்படுத்தபடுவதாக அவர் மேலும் கூறினார்.(க-15)

# விசாரணை செய்யப்படாத நிலையில் 8800 வழக்குகள் நீதிமன்றில் தேக்கம்

(கொழும்பு)

18 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் மூலமே மேல் முறையீட்டு நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளை துரிதமாக விசாரணை செய்ய முடியுமென பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது 8 ஆயிரத்து 800 வழக்குகள் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படாத நிலையில் தேங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 31ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, சட்டத்தரணிகள் சங்கத்தின் 2005ஆம் 2006ஆம் வருடத்திற்கான புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி டெப்லி பெர்னாண்டோ உத்தியோக பூர்வமாக தெரிவு செய்யப்பட்டார்.

மேல் முறையீட்டு நதிமன்றத்தில் தற்போது 1994 மற்றும 1995ஆம் ஆண்டு காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாகவும் அவா சுட்டிக்காட்டினார்.

18ஆவது அரசியல் அமைப்பு திருத்த சட்டத்தை கொண்டு வருவதன் மூலமே மாகாண அடிப்படையில் மேல் முறை யீட்டு விசாரணைகளை நடத்த முடியும் என்பதுடன் யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாந்தோட்டை ஆகிய தூரபிரதேசங்களைந சோந்தவர்களுக்கும் இது வசதியாக அமையுமெனவும் பிரதமநீதியரசர் மேலும் தெரிவித்தார். (க-9)

## பொதுக்கட்டமைப்பு அவசியம்

## கனேடிய பாராளுமன்றக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டியது அவசியம் என்று,கனேடிய பாராளுமன்றக் குழு வலியுறுத்திக் கூறியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும் போது கனேடிய பாராளுமன்றக் குழுத் தலைவர் மரியாமின்னா இவ்விடயத்தை வலிறுத்திக் கூறினார்.

சுனாமி ஆழிப்பேரலை அனர்தத்ததால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்ப அரசுக்கும் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வுடன் கூடிய பொதுக்கட்டமைப் பொன்று அமைக்கப் படவேண்டியது அவசியமென்று அவர் அழுத்திக்கூறினார்.

இதேவேளை இலங்கையில் சுனாமி ஏற்படுத்திய அழிவுகளை இப்பாராளுமன்றக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். (இ)

## கெய்ட்டியில் இருந்து இலங்கை படையினர் விலக வில்லையாம்

### பிரிகேடியர் தயாரத்நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கெய்ட்டி நாட்டிற்கு சென்று பணியாற்றும் இலஙகைப் படைவீரர்கள் மீண்டும் திருப்பி அழைக்கப்படமாட்டார்கள் என இலஙகை இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

சர்வதேச அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சென்ற படைவீரர்கள் ஒப்பந்தத்திற்கமைய அங்கு தொடர்ந்தும் பணியில் ஈடுபடுவார்கள் என இலஙகை இராணுவப் பேச்சாளர் பிரிக்கேடியர் தயாரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அங்கு பணியாற்றச் சென்ற இராணுவ வீரர்கள் இருவர் உயிரிழந்ததையடுத்து வீரர்களைத் திருப்பியழைக்குமாறு ஜே.வி.பி. தெரிவித்திருந்தமையை அடுத்து இவர்கள் திருப்பியழைக்கப்படு வார்களா எனஅவரிடம் கேட்கப்பட்ட போதே பிரிக அவர் இவ்வாறு கூறினார். ஆறு மாத ஒப்பந்த அடிப்படையில் 750 இராணுவ வீரர்கள் ஹெய்ட்டியில் பணியாற்றச் சென்றுள்ளனர். ஆறு மாதங்களின் பின்னரே அவர்கள் நாடு திரும்புவர். அதன்பின் அவர்களுக்குப் பதிலாக மேலும் 750 வீரர்களை அனுப்ப ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பதாகவும் பிரிகேடியர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அமைதிப்படையில் பணியாற்றும் காலத்தில் யுத்தத்தில் ஒரு வீரர் உயிரிழந்தால் 50 ஆயிரம் டொலர்கள் நட்டஈடாக வழங்கப்படுவதுடன் ஒருவர் காயமடைந்தால் இராணுவ விதிகளுக்கமைய ஐக்கிய நாடுகள் அமைப்பினால் குறிப்பிட்ட ஒரு தொகை நட்ட

## கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்யத்தடை

(கொழும்பு)

கல்வி அமைச்சினுள் இனிமேல் ஆர்ப்பாட்டம் செய்வோருக்கும் உண்ணாவிரதம் இருப்போருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் அமைச்சு வளவுக்குள் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கும் ஜனாதிபதியின் அறிவுறுத்தல் கிடைக்கப் பெற்றிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்தது.

கல்வி அமைச்சின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயற்படும் அனைவருக்கும் எதிராக நாடடில் நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களுக்கு இணங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளரான டாக்டர் தாரா டிமெல் பாதுகாப்புப் பிரிவினர்களுக்கு அறிவித்திருப்பதாக அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ். எல்.குணதிலக்க கூறினார்.

இசுருபாயவை அண்மித்த பகுதிகளில் உண்ணா விரதம் இருத்தல் ஆர்ப்பாட்டம் செய்தல் என்பவற்றைத்தடை செய்வதற்கும் அமைச்சு தீர்மானித்துள்ளது. சில நாட்களுக்கு முன்னர் பெற்றோர்களின் குழுவொன்று கல்வி அமைச்சின் செயலாளரது காரியாலயத்தை முற்றுகையிட்டதன்பின்பே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

## முஸ்லிம் பிரதேசங்களில் புத்தர் சிலைகள் நிர்மாணம்

(மட்டக்களப்பு)

கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் அண்மைக் காலமாக ஆங்காங்கே புத்தரின் சிலைகள் நிறுவப்பட்டு வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறு புத்தரின் சிலையை முஸ்லிம் பகுதிகளின் பொது இடங்களில் அமைப்பதை அரசு உடனடியாக நிறுத்தாவிட்டால், அங்கே இன மோதல்கள் வெடிக் கும் அபாயம் எழுந்துள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார். பொத்துவில் பகுதிகளில் சில புத்தர் சிலைகள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், முஸ்லிம் கிராமங்களின் நுழைவாயில் பகுதிகளில் பௌத்த மத சிலைகளை நிறுவுவதன் உள்நோக்கம் சந்தேகத்தை எழுப்புவதாகவும் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையின் பாதிப்பின் பின்னர், புதிதாக மீண்டும் கிழக்கில் புனரமைக்கப்படும் கிராமங்களில், தற்காலிக வீடுகளுக்கு அடிக்கல் நாட்டுவதற்கு முன்னரே புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளதை தான் நேரில் பார்த்ததாகவும் கூறினார். தமிழர்களும் முஸ்லிம்களும் மட்டுமே வாழ்ந்த பகுதிகள் ஆழிப்பேரலையால் அழிக்கப்பட்ட பின்னர், புனரமைப் பின்போது முதலில் புத்தர் சிலையை நிறுவுவது, சமாதான முயற்சிகளைப் பாதிப்பதுடன் இதன் மூலம் உருவாகும் தேசியப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தலுக்கும் காரணமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான நடராஜா ரவிராஜ், குடக்களி உட்பட பல தமிழ் மக்களது பகுதிகளில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளதை நாடாளும ன்றத்தில் ஏற்க்னவே சுட்டிக்காட்டியபோது, உரிய விவாதநேரத்தில் இவ்விடயம் கொண்டுவரப்படவில்லை என்று சபாநாயகர் உதாசீனம் செய்தது தவறு என்றும், இவ்விடயத்தை மீண்டும் விவாதத்திற்கு எடுப்பது அவசியம் என்றும் ஹக்கீம் மேலும் கேட்டுக் கொண்டார். (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எல்லாயோகங்களும் வேறுபாடில்லாமல் மனிதனை விடுதலையை நோக்கியே அழைத்துச் செல்கின்றன. இங்கே விடுதலை என்று குறிப்பிடுவது முழுமையான விடுதலையாகும். தீமையின் பிடியிலிருந்தும் அது போலவே நன்மையின் பிடியிலிருந்தும் முழுக்க முழுக்க விடுதலை பெற வேண்டும். ஓர் இருப்புச் சங்கிலி எப்படி விலங்கோ. அப்படியே தங்கச் சங்கிலியும் நமக்கு விலங்குதான்.

சுவாமி விவேகானந்தர்



நேற்று முன்தினம் துரையப்பா விளையாட்டரங்கில் சுனாமி அனர்த்த மூன்றாம்மாத நினைவை முன்னிட்டு சர்வமதப் பிரார்த்தனை நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட சர்வமதத்தலைவர்கள் மௌன அஞ்சலி செலுத்துவதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# பாடசாலைகளை தனியார்மயப்படுத்த ஐ.ம.சு.முன்னணி அரசு முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பாடசாலைகளை தனியார்மயப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை துரிதப்படுத்திவருவதாக பாடசாலைகளை பாதுகாக்கும் மக்கள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் அரசாங்கம் சுதந்திரக்கல்வியின் பொறுப்பில் இருந்து விலகுவதற்கு முயற்சிப்பதாக அந்தஅமைப்பின் தேசிய செயற்பாட்டுக்குழு உறுப்பினர் துமித்த நாகமுக தெரிவித்துள்ளார்.

இதனை எதிர்கொள்வதற்கு பாடசாலைகளை பாதுகாக்கும் மக்கள் அமைப்பின் செயற்பாடுகளை முறையாக முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த நாகமுக இதற்கென மாவட்டரீதியில் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம்திகதி விடுக்கப்பட்ட சுற்றுநிருபத்தின்படி பாடசாலைகளை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகள் தெரியவந்ததாக கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சுற்று நிருபத்தின்படி 2007ம்ஆண்டு முதல் சகல பாடசாலை மாணவர்களும் பாடசாலையில் தாம்பயிலும் 5பாடங்களுள் ஒவ்வொரு பாடத்திற்கும் 675ரூபாவை செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளதாக நாகமுக மேலும்தெரிவித்தார். (க-9)

# உ.தொ.நிறுவன இயக்குநர் ராஜரட்ணத்திற்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ரி.ராஜரட்ணத்தின் சேவைக்காலத்தைப் பாராட்டி அவருக்கு மணிவிழாச் செய்வதற்கு யாழ்.உயர்தொழிநுட்ப நிறுவனச் சமூகம் தீர்மானித்துள்ளது.

இதற்கென ரி.ராஜரட்ணம் மணி விழாச்சபையும் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சபைக்கு யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத்தலைவர் தேவராஜா தலைவராகவும், செயலாளராக உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறித்துறைத் தலைவர் கதிரமலையும், பொருளாளராக உயர் தொழிநுட்ப நிறுவனக்கணக்காளர் இராஜேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மணிவிழா தொடர்பான விபரங்களை அறியவிரும்பும் நலன் விரும்பிகளை ரி.ராஜரட்ணம் மணிவிழாச்சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## சுனாமி நிதிக்கு 25 ஆயிரம் ரூபா

தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப்பேச்சாளர் ப.கனகலிங்கம் தனக்கு குற்றப்பணமாக கிடைத்த 25ஆயிரம் ரூபாவை சுனாமி அனர்த்த நிதிக்கு வழங்கியுள்ளார்.

பிறவுண் வீதியில் அண்மையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளான அவர், யாழ்.மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார். அதுதொடர்பாக வழக்கு கடந்த 24ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பில் ஆஜரான சட்டத்தரணி பொன் .பூலோகசிங்கம் தனது கட்சிக்காரருக்கு நட்டஈடாக 25ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். எதிராளி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து கனகலிங்கத்திற்கு நட்டஈடாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

அந்நிதியைதமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாக சுனாமிநிதியில் சேர்க்குமாறு அவர் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார். (ச)

## பெண்கள் பிரச்சினையை ஆராயும் மாநாடு

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் மாநாடொன்று இன்று பருத்தித்துறை அந்தோனியார் கோயிலில் நடைபெறவுள்ளது. (ச-8)

## புலிகள்...

தெரிவித்துள்ளார்.

தொப்பிக்கல காட்டுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் மற்றும் குண்டுச்சத்தங்கள் பரவலாகக் கேட்டதாகவும், அது நேரடி மோதலாகவே இருந்திருக்கக்கூடுமென இராணுவத்தினர் தெரிவித்ததாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை மோதல் சம்பங்கள் எதுவும் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறவில்லை எனவும், இது உண்மைக்குப் புறம்பானது எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச)

# விடுதலைப்புலிகளிடம் விமானங்கள்: அரசின் செய்தியில் உண்மை இல்லை

## சர்வதேச ஊடகங்கள் தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் விமான ஓடுபாதையுள்ளது என அரசினால் வெளியிடப்பட்ட தகவல்கள் போலியானவை என சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் லண்டன் சென்றபோது விடுதலைப் புலிகளின் விமானஓடுபாதை குறித்து பிரித்தானியஅரசியல் பிரமுகர்களினால் வினாவப்பட்டதாகவும் ஆனால் லக்ஸ்மன் கதிர்காமர் அது குறித்து தடுமாறியபடி பதிலளித்து மழுப்பியதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைஅரசினால் இவ்வாறு போலித்தகவல்வழங்கப்பட்டு வந்தால் அது அந்நாட்டின் இறைமையை பாதிப்பதுடன் அரசாங்கத்திற்கு அது பாரியபாதிப்பை ஏற்படுத்தும் எனவும்அச்செய் தியில்தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச)

## மாணவர்களின்....

சங்கம் தீர்மானித்துள்ளது. இதே வேளை,

யாழ். பல்கலைக்கழகத்தினுள எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பின் துணைவேந்தர் நுழையமுடியாதென பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. தம்முடன் இணைந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இம்முடிவினை மேற்கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தாம் இன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மெண்டிஸுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் காண்டீபன் தெரிவித்தார். (ச)

## புலிகளின்.....

மரணவிசாரணையும் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ச-4)

## ஜனாதிபதியை அரசியலிலிருந்து....

ஜனநாயகம் குறித்தோ, நாகரிகத் தன்மை குறித்தோ சந்திரிகாவுக்கு எதுவும் தெரியாது. அவர் ஒரு முரண்பாடானவர்.

ரணில் விக்கிரமசிங்ககூட முதலில் சந்திரிகாவுடன் இணக்கப்போக்கை மேற்கொள்ள முயன்றார். நாடாளுமன்றக் கலைப்புக்குப் பின்னரே அவர் யார் என்பதை தெளிவாகப் புரிந்துவைத்திருக்கிறார்.

எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பரில் நாடு இன்னொரு பொதுத்தேர்தலை கண்டிப்பாகச் சந்திக்கும். நான் அதற்கு இப்போதே தயாராகி வருகிறேன் என்றார்.

ஜனாதிபதியுடன் என்னை சமாதானமாக்க பலர் முயற்சித்து வருகின்றனர். ஒரு பிரிவினர், எனது தாயாரை ஜனாதிபதியுடன் சந்திக்கவைக்க முயற்சித்தனர். இப்போதும்கூட சந்திரிகா தரப்பினர் சிலர் இரகசியமாக என்னை சிறையில் சந்தித்து வருகின்றனர்.

எந்த சூழ்நிலையிலும் சந்திரிகாவுடன் எந்த ஒரு இணக்கத்தையும் உருவாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இருப்பதிலேயே நான் பெருமையடைகிறேன் என எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார். (ச)

## பொதுமக்களின் கொலைகளுக்கு....

இதனையடுத்து விடுதலைப்புலிகளும் மக்களும் இணைந்து காவலகடமைகளில் ஈடுபட்டுவந்தனர்.

இரவுவேளைகளில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிறப்புப் படையணியின் நடவடிக்கையினாலேயே அப்பாவி பொதுமக்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட துக்ககரமான சம்பவம் இடம்பெற்றதாக தாம் சந்தேகிப்பதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்தமீறல் என்றும் இச்சம்பவத்தைத் தாங்கள் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு ஆழ்ந்த சோகத்தில் இருக்கும் இரு குடும்பங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற வாகன விபததொன்றில் புகழமுதன், இறைமாறன் ஆகிய இரண்டுபோராளிகள் சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் மற்றுமொரு அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.(ச)

## சர்வஜன வாக்கெடுப்பிற்கு...

ஒதுக்கீடு செய்யப்படாமல் வாக்கெடுப்புக்கு அரசு பணத்தை செலவிடுவது வீண்விரயமே.

1994 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி அதிகாரம் குறித்து மக்கள் தீர்ப்பளித்துவிட்டார்கள். மீண்டும் எதற்காக இன்னொரு வாக்கெடுப்பு? தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விவாதிக்காமல் இது போன்ற வாக்கெடுப்புகளை நடத்துவது அர்த்தமற்றது என்றார்.

இதேவேளை, சந்திரிகா அரசு கூறுகிற இந்த சர்வஜன வாக்கெடுப்பு குறித்து முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருவித குழப்பமான நிலையே நீடிக்கிறது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அரசியல் விளையாட்டுகளில் இதுவும் ஒன்றே என நான் கருதுகிறேன். இதை நாங்கள் ஏற்க முடியாது. நிறைவேற்று அதிகார முறை ரத்து மற்றும் சமஷ்டி உள்ளிட்ட எதுவானாலும் மக்களுக்கு உரிய விளக்கத்தை அரசு அளிக்காதவரை அதை ஏற்க இயலாது.

இந்த வாக்கெடுப்பு குறித்து ஜனாதிபதி மீள்பரிசீலனை செய்வதோடு தீவகத்தின் இனச் சிக்கலுக்கு உரிய தீர்வுகாணுவதில் அக்கறை செலுத்த வேண்டும் என்றார் அவர். (ச)


## பதவி வெற்றிடங்கள்

- அலுவலக லிகிதர்
- Computer Typist
- பரீட்சைப் பகுதி பொறுப்பாளர்
- ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள்

தேவையான தகைமைகள்

1) தெரிவுசெய்யும் பதவிக்குரிய உயர் கல்வித் தகைமைகளும் அனுபவமும்
2) நிறுவனத்திலிருந்து 3 Km சுற்றாடலில் வசிப்பவராயிருத்தல்

நிறுவன பழைய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

The Express Institute
Irupalai, Kopay.

அதிபர்

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
குளிரூட்டப்பட்டது
இன்று (26.03.2005) முதல்
விஜயகாந்த், சூசன், செந்தில் நடித்த
நெறஞ்ச மனசு
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு அங்கீதா நடித்த

லண்டன்
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள். பு.நே. 10.30, 2.30, 6.30

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
(24.03.2005 முதல்)
சிம்பு(டீவேட்டு), ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்:-11.00, 2.45, 6.00(பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.